விலை: 60.00
பக்கங்கள் : 24
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 23
ஒலி 161 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 15 ஞாயிற்றுக்கிழமை (29.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

◈ ஆலடி
மாநாடு
◈ வியாசர்
பதில்களுடன்
உங்கள்
சங்குநாதம்
உள்ளே

ஜனாதிபதி பதவியிலிருந்து விலகமாட்டேன்

# பிரதமர் ரணிலுடன் இணைந்து நாட்டை மீட்டெடுப்பேன்

அமைச்சர்கள் முன்னிலையில் கோட்டா



(கொழும்பு)

"புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பேன் " என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சர்கள் முன்னிலையில் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களுடன் நடத்திய விசேட கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் கூறினார் என்று வெளி ▷23

# கொழும்பில் களேபரம்

◈ அரசையும் ஜனாதிபதியையும் பதவி விலகுமாறு கோரி கறுப்பு உடை அணிந்து மக்கள் பாரிய பேரணி

◈ பொலிஸார் நீர்த் தாரை, கண்ணீர் புகைத் தாக்குதல்



(23 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். பல்கலையில்

## இணைப் பேராசிரியர் பேராசிரியராக பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இணைப் பேராசிரியர் ஒருவர் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

விஞ்ஞான பீடத்தின் தாவரவியற் துறை ▷23

## முச்சக்கரவண்டி, மோ. சைக்கிளுக்கு

95 ஒக்டேன் பெற்றோல் இல்லை

(கொழும்பு)

முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு 95 ஒக்டேன் பெற்றோல் வழங்கப் படமாட்டாது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

சில முச்சக்கர வண் ▷23

## நாவாந்துறையில் விபத்து இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)



யாழில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

கொட்டடி நாவாந்துறை பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற குறித்த விபத்தில் நவரட்ணராஜா சங்கீத் (வயது 31) என்பவரே உயிரிழந் ▷23

காணாமல்போன

## 9 வயது சிறுமி சடலமாக மீட்பு

(கொழும்பு)

காணாமல் போயிருந்த 9 வயது பாத்திமா ஆய்ஷா சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



பண்டாரகம, அட்டுலுகம பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த சிறுமி நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் தனது வீட்டிலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவிலுள்ள கடையொன்றுக்கு கோழி இறைச்சி வாங்குவ ▷23

உணவின்மை காரணமாகவே

## வட்டுக்கோட்டையில் இரு வயோதிப பெண்கள் மரணித்தனர்

மரண விசாரணையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உணவின்மை காரணமாகவே வட்டுக்கோட்டையில் இரு வயோதிபப் பெண்களும் மரணித்துள்ளனர் என மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை பகுதியில் கவனிப்பாரற்ற நிலையில் மீட்கப்பட்ட இரு வயோதிபப் பெண்களின் சடலங்கள் மீதான பிரேத பரிசோதனை ▷23

சுன்னாகத்தில் 11 பரல்களில்

## எரிபொருள் பதுக்கி வைத்திருந்தவர் கைது



(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் 11 பரல்களில் எரிபொருள்களைப் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ▷23

## மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கு யோசனை

எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர



(கொழும்பு)


அதிகூடிய மின் பாவனையைக் கொண்ட பாவனையாளர்களுக்கான மின்சார கட்டணங்களை திருத்துவதற்கான யோசனையொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ▷23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு
## அருகாமையில் 96 பரப்பு காணி விற்பனைக்கு

- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி 100 m தூரம்
- கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100 m தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- நன்னீரூற்று.
- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300m தூரம்
- மூன்று வழிப் பாதை மேட்டுநிலம்
- கைதடி சந்தி 500m தூரம்
- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்




**பார்வையிடும் நேரம்**

**காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை**

## ஒரு பரப்பின் விலை - ஐந்து இலட்சம்

**தொடர்பு:- 077 623 4204, 077 288 0152, 076 436 5814**

(11641)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கு அம்மை சமூகப் பரவலாக மாறும் அபாயம்

# உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

(ஜெனிவா)

**தற்போது உலக நாடுகளில் பரவும் குரங்கம்மை நோய் வேகமாக பரவக் கூடியதல்ல. ஆனாலும் சமூகப் பரவலாக மாறக் கூடிய அபாயம் உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**



இங்கிலாந்து, ஸ்பெயின், போர்த்துக்கல், கனடா, அமெரிக்கா உள்ளிட்ட 20 நாடுகளில் ஏறத்தாழ 200 பேருக்கு குரங்கு அம்மை பாதித்துள்ளது .

இது குறித்து உலக சுகாதார அமைப்பின், "உலக தொற்று அபாய தயார்நிலை" குழுவின் இயக்குநர் சில்வி பிரையன்ட் நேற்று முன்தினம் தெரிவித்ததாவது,

"மக்கள் கவலைப்படும் அளவுக்கு குரங்கம்மை வேகமாக பரவும் நோயல்ல. ஆனால், மெதுவாக இது சமூக பரவலாக மாறக் கூடிய அபாயம் உள்ளது. இதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு, விரைவான நடவடிக்கை தேவை.

தடுப்பூசியும், முறையான சிகிச்சையும் இதற்கு ஒரே தீர்வு. பாதிக்கப்பட்டவர்களை கண்டுபிடித்து, தனிமைப்படுத்துவதே; இதன் பரவலை தடுப்பதற்கான முதல் கட்ட நடவடிக்கையாகும்.

எதிர்காலத்தில் இந்த குரங்கு அம்மை இன்னும் அதிக எண்ணிக்கையிலானவர்களை பாதிக்கும் என எதிர்பார்க்கிறோம்" என்று அவர் தெரிவித்தார். (நி-6)

## கட்டுமானத்துறையில்

## 75 வீதமானோர் வேலைகளை இழக்கும் ஆபத்து

(கொழும்பு)

இலங்கையில் தற்போது நிலவும் நெருக்கடியான சூழ்நிலையில், கட்டுமானத் துறையில் ஈடுபட்டுள்ள சுமார் 75% தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயத்தில் இருப்பதாக இலங்கை தேசிய கட்டுமான சங்கம் தெரிவித்துள்ளது.

அடுத்த மாதத்திற்குள் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள 1.2 மில்லியன் மக்கள் வேலையின்மையை எதிர்கொள்ள நேரிடும் என அச் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

தற்போது 90 சத வீதமான கட்டுமானப் பணிகள் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

800,000 முதல் 900,000 வரையிலான பணியாளர்கள் கட்டுமானத் துறையின் மூலம் நாட்டிற்கு நேரடியாகப் பங்களிப்பதைச் சுட்டிக்காட்டிய அவர், பல கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் பொறியியலாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஏற்கனவே வேலை இழந்துள்ளதாகவும் குறிப்பிட்டார். (நி-6)

## சேதமடைந்த நாணயத் தாள்களை புதன்கிழமைகளில் மட்டும் மாற்றலாம்

## இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியினால் பராமரிக்கப்படும் சேதமடைந்த நாணயத்தாள் மாற்றும் கருமபீடம் புதன் கிழமைகளில் மட்டும் திறந்திருக்கும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு மே 19ம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை,

புதன் கிழமைகளில் காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரை பொது மக்கள் சேதமடைந்த நாணயத்தாள்களை மாற்றிக்கொள்ளலாம் என இலங்கை மத்தியவங்கி அறிவித்துள்ளது. (நி-6)

## உதிரி பாகங்களின் விலை சடுதியாக உயர்வு; மீண்டும் அதிகரிக்கப்படும் பேருந்து கட்டணங்கள்



(கொழும்பு)

டயர், டியூப் உள்ளிட்ட உதிரி பாகங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், வருடாந்த பேருந்துக் கட்டண திருத்தம் ஜூன் மாதம் மேற்கொள்ளப்படும் என அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்புடன் ஒப்பிடும் போது அண்மையில் பேருந்துக் கட்டணம் அதிகரிக்கப்பட்ட போதிலும் அது போதுமானதாக இல்லை.

பேருந்துக் கட்டண உயர்வால், பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. இந்நிலையில் பேருந்து தொழில் கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

இத்தொழிலுக்கு டீசல் மானியம் வழங்கினால், பழைய கட்டணத்திலேயே பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும் எனவும் அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார். (நி-6)


31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர். கந்தையா குலசிங்கம்

(ஊடகவியலாளன், அகில இலங்கைச் சமாதான நீதிவான்)

தோற்றம்
16 . 12 . 1940



மறைவு
29 . 04 . 2022

அன்பின் திருவுருவாய் ஆற்றல் தரும் ஒளியாய்
ஆயகலையெல்லாம் உவந்தளித்த உத்தமரே!
ஊடகத்துறைதனிலே உயர்வடைந்த வல்லவரே!
உலகத்தார் போற்றுகின்ற உண்மையதன் சேகரமே!
கனிவென்ற சொல்லுக்குக் கச்சிதமாய் பொருந்தியே
காரியங்கள் ஆற்றுவதில் கவனத்தின் பெரும்பேறாய்
பொதுப் பணிகள் செய்வதிலே புகழ்பூத்த புண்ணியராய்
மற்றவரின் உயர்வுகளில் மனமகிழ்ந்து வாழ்ந்தவரே!
இவ்வுலகில் எமையெல்லாம் பரிதவிக்க விட்டுவிட்டு
இறையடியில் பணியாற்ற இசைவாகச் சென்றீரோ!

இன்று 29.05.2022 ஞாயிற்றுக்கிழமை தாவடியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் இடம்பெறும்.

(11652)

வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, தாவடி.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்லர் அதிரடி சதம்

# பெங்களூர் அணியை வீழ்த்தி

# இறுதிக்குள் நுழைந்தது ராஜஸ்தான்

ஐ.பி.எல். இருபது-20 தொடரின் இறுதிப் போட்டிக்கான இரண்டாவது தகுதிப் போட்டியில், ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.



இந்த வெற்றியின் மூலம் இன்று அஹமதாபாத் மைதானத்தில் நடைபெறவுள்ள மகுடத்திற்கான இறுதிப்போட்டியில், ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, குஜராத் டைடன்ஸ் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

அஹமதாபாத் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 157 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ராஜட் படிதார் 58 ஓட்டங்களையும் டு பிளெஸிஸ் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் பந்துவீச்சில், பிரசீத் கிருஸ்ணா மற்றும் ஒபெட் மெக்கோய் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் போல்ட் மற்றும் அஸ்வின் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 158 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, 18.1 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜோஸ் பட்லர் ஆட்டமிழக்காது 106 ஓட்டங்களையும் சஞ்சு சம்சன் 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் பந்துவீச்சில், ஜோஸ் ஹெசில்வுட் 2 விக்கெட்டுகளையும் வனிந்து ஹசரங்க 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 60 பந்துக்ளில் 6 சிக்ஸர்கள் 10 பவுண்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 106 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட ஜோஸ் பட்லர் தெரிவு செய்யப்பட்டார். (4)

## இந்தியாவிற்கு பயணமான வவுனியா வீர வீராங்கனைகள்



'சிறிலங்கா மிக்ஸ்பொக்சிங்' அமைப்பின் ஊடாக இந்தியாவில் இடம்பெறவுள்ள உலக கிண்ண மிக்ஸ் பொக்சிங் போட்டிக்கான தெரிவுப்போட்டியில் பங்கேற்க வவுனியா மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த 7 வீரவீராங்கனைகள் இந்தியாவிற்கு சென்றுள்ளனர்.

27 ஆம் திகதி ஆரம்பமான போட்டிகள் 30 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது. தெரிவு செய்யப்படும் வீர வீராங்கனைகள் உலக மிக்ஸ் பொக்சிங் சங்கத்தினூடாக 3 மாத பயிற்சியை பெற்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இடம்பெறவுள்ள உலக கிண்ண போட்டியிலும் பங்கேற்கவுள்ளனர். (4-299)

## சென்.நீக்கிலஸ் பிறிமியர் லீக் கால்பந்தாட்ட இறுதிப்போட்டி





சென். நீக்கிலஸ் பிறிமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி சென். நீக்கிலஸ் விளையாட்டு மைதானத்தில் இன்று 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரவு 7.30 மணிக்கு சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழகத் தலைவர் சே. உஷாந்தன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். பிரதேச செயலாளர் சா. சுதர்சன், நாவாந்துறை பங்குத்தந்தை வண. ம. யேசுரட்ணம் மற்றும் யாழ். உதைபந்தாட்ட லீக் தலைவர் இ. ஆனல்ட் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்போட்டியில் நாவாய் யங்லயன்ஸ் அணியும் நாவாய்ஹூரோஸ் அணியும் வெற்றிக் கிண்ணத்திற்காக பலப் பரீட்சை நடத்தவுள்ளன. (4)

## பங்களாதேஷிற்கு எதிரான தொடரை கைப்பற்றியது இலங்கை அணி



டாக்காவில் நடந்த பங்களா தேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி தொடங்கிய போட்டியில் முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி 365 ஓட்டங்கள் எடுத்தது.

பின்னர் முதல் இன்னிங்சை ஆடிய இலங்கை அணி 506 ஓட்டங்கள் குவித்தது.

அதனைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய பங்களாதேஷ், அசித பெர்னாண்டோ பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விக்கெட்டுகளை பறிகொடுத்தார். தாஸ், ஷகிப் ஆகியோர் மற்றும் அரை சதம் அடித்த நிலையில் பங்களாதேஷ் 169 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இலங்கை தரப்பில் அசித பெர்னாண்டோ 6 விக்கெட்டுகளையும், ரஜிதா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து இலங்கை அணி 29 ஓட்டங்கள் வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கியது. அதிரடியாக 3 ஓவர்களில் இலக்கை எட்டி 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் இரண்டு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரை இலங்கை அணி 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டீசலுடன் மற்றுமொரு கப்பல் இன்று நாட்டை வந்தடையும்

(கொழும்பு)

டீசலை ஏற்றிக்கொண்டு மற்றுமொரு கப்பல் இன்று நாட்டை வந்தடைய உள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கு வந்துள்ள கச்சா எண்ணெய்யை கப்பலில் இருந்து இறக்கும் பணி ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல முனையங்களில் தற்போது 17,077 மெற்றிக் தொன் டீசல், 1,072 மெற்றிக் தொன் சூப்பர் டீசல், 92 பெற்றோல் - 37,391 மெற்றிக் தொன், 95 பெற்றோல் - 6,142 மெற்றிக் தொன், JET A1 எரிபொருள் - 2,437 மெட்ரிக் தொன் இருப்பதாகவும் தெளிவுபடுத்தினார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு டீசல் மற்றும் பெற்றோல் விநியோகம் தொடரும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (நி-6)

# பிரதமர் வீட்டை முற்றுகையிட தயாராகும் மீனவர்கள்

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

(கொழும்பு)

மானிய விலையில் எரிபொருள் வழங்கக் கோரி அமைச்சர்கள் மற்றும் பிரதமர் வீடுகளை விரைவில் முற்றுகையிட கடற்றொழிலாளர்கள் தயாராகி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கல்விப் பொதுத்தராதர சாதாரணப் தரப் பரீட்சை நிறைவடைந்ததன் பின்னர் இந்தப் போராட்டத்தை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் திலீப் வெத ஆராச்சி தெரிவித்துள்ளார்.

கடற்றொழிலாளர்கள் வீதிகளில் இறங்கினால் அவர்களைத் தடுப்பது மிகவும் கடினம் என்று அவர் எச்சரித்துள்ளார். (நி-6)

## அஜித் ரோஹண உட்பட

# சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் அதிரடி இடமாற்றம்

(கொழும்பு)

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண உள்ளிட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் சிலர் அதிரடியாக இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஆர்.எஸ்.தமிந்தவுக்கு தென் மாகாணத்திலிருந்து கிழக்கு மாகாணத்திற்கும் குற்றவியல் மற்றும் போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தென் மாகாணத்திற்கும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

அத்துடன் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எல்.கே.டபிள்யூ. கே.சில்வா கிழக்கு மாகாணத்திலிருந்து குற்றவியல் மற்றும் போக்குவரத்து பிரிவிற்கு இடமாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (நி-6)

# 50 ஆவது நாளாகவும் தொடரும் கோட்டா கோ கம போராட்டம்




(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்திற்கு எதிராக இடம்பெறும் கோட்டா கோ கம அமைதிப்போராட்டம் நேற்றுடன் 50 நாட்களை கடந்துள்ளது.

இந்நிலையில், நேற்றும் கொழும்பு காலிமுகத்திடலில் போரட்டம் இடம்பெற்றது. (நி-6)

# மரண அறிவித்தல்



பிறப்பு 22 – 02 – 1950

இறப்பு 27 – 05 – 2022

## செல்லத்துரை புவனேந்திரன்

(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர் – யாழ். போதனா வைத்தியசாலை)

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை புவனேந்திரன் அவர்கள் நேற்று முன்தினம் (27.05.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - ஆச்சிமுத்து தம்பதியரின் இளையபுத்திரனும் பேபிகமலாவின் (ராணி) பாசமிகு கணவரும் காலஞ்சென்ற இராசையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கமலநாதன், பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோகிலேந்திரன் (பிரசன்னா-லண்டன்), ஸயந்தன் (கொமர்ஷல் வங்கி - சுன்னாகம் கிளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் றோஜிதா (லண்டன்), துஷானி (சட்டத்துறைத் தலைவர்- யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ராகவி, ஐஸ்வர்யா, வியாஸகி, பாவலன், நாவலன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற சிங்கரட்ணம் மற்றும் இராஜேஸ்வரி, செல்வராஜா, மதியரட்ணம், றேணுகாதேவி, தங்கராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.05.2022) ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.663, நாவலர் வீதி,
நல்லூர்.

(11646)

தகவல் :
குடும்பத்தினர்

# இராசிபலன்

29.05.2022
வைகாசி 15, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 3.44 மணிவரை

கார்த்திகை முழுவதும்
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை

கார்த்திகை விரதம்
சந்திராஷ்டமம் -சித்திரை

**வளவன்**

**மேஷம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**கடகம்** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், பொது வழியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**துலாம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**மகரம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும்.

**சிம்மம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பணியில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும், சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**மிதுனம்** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கன்னி** பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயமுண்டு.

**தனுசு** புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் வாய்ப்புண்டு.

**மீனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான் தெரியாதவன் போதிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட வேண்டும்

## சுமந்திரன் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டு அரசாங்கம் அமைக்கப்படவேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**




யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் மகிந்த ராஜபக்ஷவுக்கு பதிலாக ரணில் அமர்ந்திருக்கிறார். ராஜபக்ஷ எங்கும் போகவில்லை. ராஜபக்ஷவின் ஆட்சியே தற்போது நடக்கிறது. இந்த நிலைமை மாறாமல் பொருளாதார சிக்கலில் இருந்து இலங்கை மீளமுடியாது. மக்களை ஏமாற்றாமல் பொறுப்பானவர்கள் பதவி விலகி அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும். ஓகஸ்ட் மாதமளவில் பாரிய பஞ்சமும் உணவுப் பற்றாக்குறையும் ஏற்படும்.

தற்போதுள்ள அரசாங்கத்தை புதிய அரசாங்கம் என நான் கூறப் போவதில்லை. இது புதிய அரசாங்கம் இல்லை. பாராளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு அரசாங்கம் அமைக்கப்படவேண்டும். இன்று வட பகுதியிலே மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு காணப்படுகிறது. இந்த நிலைமை உடனடியாக மாற்றப்பட வேண்டும். மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் உடனடியாக கிடைப்பதற்கான வழிகள் செய்யப்பட வேண்டும் என தெரிவித்தார். (4-6-33)

## கால்நடை மீட்பு



(கரணவாய்)

துன்னாலை குடைவத்தைப் பகுதியில் இறைச்சிக்காக கட்டி வைத்திருந்த மாடு ஒன்று நெல்லியடி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. மாட்டில் K.M என அடையாளம் இடப்பட்டுள்ளது. கால்நடை களவு போயிருந்தால் நெல்லி யடி பொலிஸ் நிலைய பொலிஸாரிடம் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4-6-60)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

(சாசகச்சேரி)

மாங்குளம் விசேட அதிரடிப் படையின் சுற்றிவளைப்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் 2கிலோ 900 கிராம் கேரளக் கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைதாகியுள்ளார். கெற்பேலியில் இருந்து கிளிநொச்சிக்கு கஞ்சா கடத்தப்படவிருப்பதாக அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கெற்பேலி மத்திப் பகுதியில் வைத்து குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாவுடன் கைதான நபரை கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

## 41/2 பவுண் நகை சாவகச்சேரியில் திருட்டு


(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மண்டுவில் சோலை அம்மன் கோவிலடிப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை வீடொன்றினை உடைத்து நான்கரைப் பவுண் நகை திருடப்பட்டிருப்பதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. வீட்டில் இருந்தவர்கள் வெளியே சென்ற சமயம் பகல் வேளையில் குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

## கொரோனா வீட்டுக்கதைகள் நூல் பற்றிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவையின் ஏற்பாட்டில் புலம்பெயர் எழுத்தாளர் மனோ சின்னத்துரையின் "கொரோனா வீட்டுக் கதைகள்" நூல் பற்றிய கலந்துரையாடலும் ஆசிரியருடனான சந்திப்பும் நாளை 30 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இல. 128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. கவிஞரும் எழுத்தாளருமான சி.கருணாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நூலிலுள்ள கதைகள் குறித்த உரைகளை தி.செல்வமனோகரன், நா.நவராஜ், வனிதா சேனாதிராஜா, சி.ரமேஷ் ஆகியோர் வழங்கவுள்ளார்கள். பதிலுரையை நூலாசிரியர் மனோ சின்னத்துரை வழங்குவார். ஆர்வமுள்ள அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (4-6)




சிவபூமி அறக்கட்டளை ஊடாக 3 ஆவது தடவையாக யாழ். போதனா மருத்துவமனை சத்திரசிகிச்சை பிரிவுக்கு ஒரு தொகை மருந்துப் பொருட்கள் கலாநிதி . ஆறு .திருமுருகனால் நேற்று வழங்கி வைக்கப்பட்டன. (படம் - ரவிசாந்)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுநிலை நூலகர் அமரர்.ரோகிணி பரராஜசிங்கத்தின் நினைவஞ்சலி நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் பல்கலைக்கழக நூலகப் பதில் நூலகர் திருமதி.கல்பனா சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. இந்த நினைவஞ்சலி நிகழ்வில் நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு ஓய்வுநிலை நூலகர் அமரர். ரோகிணி பரராஜசிங்கத்தின் உருவப் படத்துக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், பேரவை உறுப்பினருமான பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு நினைவு உரைகள் நிகழ்த்தினர். (படங்கள் - சிவசாந்தன்)

## இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் வைபவம்





(குப்பிழான்)

செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகனின் 61 ஆவது பிறந்தநாளை முன்னிட்டுக் கலாநிதி. ஆறு. திருமுருகனின் பிறந்தநாள் அறநிதியச் சபையின் ஏற்பாட்டில் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் வைபவம் நேற்று சனிக்கிழமை ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அன்ன பூரணி மண்டபத்தில் இடம் பெற்றது.

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியற்பீட சிரேஷ்ட விரிவு ரையாளர் கலாநிதி.சின்னையா கருப்பையா நவரட்ணராஜா மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் இராமச்சந்திரன் இரமணன் ஆகியோர் மேற்படி நிகழ்வில் இந்த வருட இளைய ஆற்றலாளர் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (4-6-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 345
Viber 076 636 3378







பெற்றோல்! பெற்றோல்!

# எங்கே செல்லும் இந்தப்பாதை...

■ அபிமன்யு

ஒரு நாட்டின் அரசனுக்கு அரச சபையில் பல வகைப் பழங்கள் உண்பதற்குப் பரிமாறப்பட்டது.

பழங்களைப் பார்த்ததும், அட நாம் தொடர்ந்து உண்ணும் பழங்கள் என சலித்துக் கொண்ட அரசன் மந்திரியை அழைத்து இந்த உலகில் நான் உண்ணாத, அறியாத பழத்தை யார் கொண்டு வருகின்றார்களோ அவர்களுக்கு விலை உயர்ந்த பரிசுகள் வழங்கப்படுவதுடன் அரசவையில் உயர் பதவியும் வழங்கப்படும் என நாட்டு மக்களுக்கு அறிவிக்கும்படி உத்தரவிட்டான்.

அடுத்த கணமே காட்டுத் தீயாய் தகவல் பரவியது. மன்னனின் அரண்மனை முன்பு மக்கள் சனக்கூட்டம் கூடியது.

இப்போது எரிபொருளுக்கும் எரிவாயுவிற்கும் நிற்பதைவிட இரு மடங்கு மக்கள் வெள்ளம். அரண்மனைக் காவலர்கள் பழங்களுடன் வந்தவர்களைக் கட்டுப்படுத்தப் போராடினர்.

இதில் என்ன விநோதம் என்றால் ஒருவர் கொண்டு செல்லும் பழம் மன்னன் உண்ட பழம் என்றால் அந்தப் பழத்தைக் கொண்டு சென்ற வரின் வாய்க்குள் அது திணிக்கப்படும் என்பது விதியாக இருந்தது.

வரிசை எறும்பாய் நகர்ந்து கொண்டிருந்தது. ஒருவர் கையில் அன்னாசிப் பழத்தை வைத்துக் கொண்டு எப்படியாவது பொன்னையும் பொருளையும் அரச பதவியையும் எடுத்து விடலாம் என்று நம்பிக்கையுடன் நகர்ந்தார்.

அவரின் முறை வந்தது. பழத்தை மன்னனிடம் நீட்டினார். மன்னனுக்கு கோபம் மேலோங்க அரண்மனை காவலர் பக்கம் கையை நீட்டினான்.

அன்னாசிப்பழம் அவர் வாயில் திணிக்கப்பட்டது. பிறகென்ன வாயில் இரத்தம் வடிய வெளியே வந்தவர் சிரித்துக் கொண்டே வந்தார்.

அங்கு நின்றவர்களுக்கு ஆச்சரியம். அடடா இவ்வளவுக்கு வாய் புண்ணாய்க் கிடக்கிறது. இவர் சிரிக்கிறாரே என்ற வெறுப்புடன் ஏன் சிரிக்கிறாய் என்று கேட்டனர்.

அதில்லை. நான் அன்னாசியைக் கொண்டு சென்றேன்.

எனக்கே இக் கதி என்றால் பின்னால் ஒருவர் பலாப் பழத்துடன் நிக்கிறார். அவரை நினைத்தேன் சிரித்தேன் எனப் பதில் சொன்னார். இந்தக் கதை இங்கு ஏன் என்று கேட்கிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது. சொல்கிறேன்.

ஆம், இன்றைய ஆட்சித் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நிலையும் பலாப் பழம் வைத்திருந்தவரின் நிலையே.

நாடு மிகப் பெரும் மோசமான நிலையில் சென்று கொண்டிருந்தவேளை மக்கள் தன் எழுச்சிப் போராட்டம் ஒன்றின் மூலம் மிகப் பெரும் மாற்றம் ஏற்படப் போகிறது என்று அனைவரும் எதிர்பார்த்த வேளை அவற்றைத் தடுத்து நிறுத்துவதாய் ரணில் விக்கிரமசிங்கவின் பிரதமர் அவதாரம் அமைந்திருந்தது.

ரணில் வந்து விட்டார். இனி பொருட்களின் விலைகள் குறையும். பெற்றோல், எரிவாயு என்பன எமக்கு தாரா ளமாய்க் கிடைக்கும் என்ற வதந்தியை நம்பிய மக்கள் அமைதியாகினர்.

அதன்பின் வன்முறையில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். சுமார் ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இது மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களையும் சேர்த்த தொகையே. இந்தக் கைதுகளுக்குப் பின் எவ்வாறு மக்களின் எழுச்சி உருவெடுக்கும்.

அட ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பொறுப்பேற்ற பின்னரே ஏலவே இருந்ததைவிட எரிபொருளுக்கு தட்டுப்பாடும் மிகத் தீவிரமானது. அத்துடன் 420 என்ற அதி உச்ச விலையை பெற்றோல் எட்டியது மிகப் பெரும் சாதனையே.

தாராளமாய் எரிபொருள் கிடைக்கும். இனி வரிசையில் நிற்கத் தேவையில்லை என்று அறிவித்தல் வந்து பத்து நாட்களைக் கடந்து விட்டது. ஆனால் தொடர்ந்து வரிசை யுகம் மாறவே இல்லை.

அதைவிட 420 என்ற அதி உச்ச விலைக்கு எரிபொருளை நிரப்புவது என்றால் மிகக் கடினமே.

ஒரு நபர் ஐந்நூறு அல்லது ஆயிரத்துக்கு எரிபொருள் நிரப்பினால் அவருக்கு ஒன்று அல்லது இரண்டு லீற்றர் எரிபொருளே கிடைக்கும். இது நாட்டில் உள்ள அநேகருக்கு கடுமையானதே. அவர் மீண்டும் வரிசையில் நிற்கும் நிலையையே இது ஏற்படுத்தும்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவி ஏற்றால் அனைத்தும் தீரும் என்றார்கள். இன்று நிலைமை மிக மோசமாகிவிட்டது.இன்னும் இரண்டு மாதத்துக்குத் தேவையான உணவுப் பொருட்களே இருப்பில் இருக்கிறது. அதன் பின் மிகக் கொடுமையான பட்டினி நாட்டில் ஏற்படும் என பிரதமர் ரணில் கூறுகின்றார்.

நாட்டை நான் மீட்கின்றேன் என்று பொறுப்பேற்றவர் இதைச் சொல்லவா பொறுப்பேற்றார் என்ற கேள்வி நாட்டு மக்களிடம் எழாமல் இல்லை.


ஆக, அன்னாசிப் பழம் கொண்டு சென்றவர் பலாப் பழம் வைத்திருந்தவரைப் பார்த்து சிரித்த கதையாய் நிலை மாறுமோ என்பதனை எதிர்வரும் ஜூன் மாதம் நாட்டில் பாரிய கலவரம் வெடிக்கும். அது இலங்கைத் திருநாட்டை அழிப்பதாய் அமையும் என பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை விடுத்ததை நினைவுபடுத்துகின்றது.

“

**நாடு மிகப் பெரும் மோசமான நிலையில் சென்றுகொண்டிருந்த வேளை மக்கள் தன் எழுச்சிப் போராட்டம் ஒன்றின் மூலம் மிகப் பெரும் மாற்றம் ஏற்படப் போகிறது என்று அனைவரும் எதிர்பார்த்த வேளை அவற்றைத் தடுத்து நிறுத்துவதாய் ரணில் விக்கிரமசிங்கவின் பிரதமர் அவதாரம் அமைந்திருந்தது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## பங்கீட்டு நடைமுறையை சங்கங்கள் செய்ய வேணும்

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் கங்காணி கார்த்திகேயனைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். ஈழத்தின் சிறந்த எழுத்தாளர் தெணியான் அவர்கள் காலமாகி விட்டார். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் மீண்டும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

ஆலடியில் சில நிமிடம் அமைதி நிலவியது. அமைதியைக் கலைக்க மூப்பர் குரல் கொடுத்தார்.

என்ன இன்னமும் கங்காணியாரைக் காணவில்லை. என்ன சங்கதியோ இவ்வாறு மூப்பர் கேட்கவும் அந்நேரம் பார்த்து கங்காணி கார்த்திகேயன் மோட்டார் சைக்கிளில் வேகமாக ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

இந்தா கங்காணியார் வந்திட்டார். அவருக்கு ஆயுள் நூறு. சாத்திரியார் சதாசிவம் கூற, நூறு வயது மட்டும் இருந்து என்ன செய்யிறது. இந்தா ஒரு கிலோ சீனி 300 ரூபாவுக்கு வந்து விட்டது. இந்த நிலையில நூறு வயது மட்டும் இருந்தா என்ன கதி எண்டு ஒருக்கா நினைச்சுப் பாருங்க.

**சிறாப்பர்:** அதுசரி கங்காணியார் மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் இருக்குதோ. வரிசையில நிண்டு பெற்றோல் அடிக்க முடியாதெண்டதால நான் இப்ப நடந்து தான் திரியிறன்.

**கங்காணி:** என்ர மூத்த மகன் அதிபராக இருக்கிறான். சாதாரண தரப் பரீட்சைக்கு மேற்பார்வைக்குச் செல்கிறதால அவன்ர மேற்பார்வைக் கடிதத்தை வைத்துத்தான் பெற்றோல் அடிக்கிறம்.

**பண்டிதர்:** அதென்ன பெற்றோல் அடிக்கிறம் எண்டு பன்மையில சொல்லுறியள்.

**கங்காணி:** ஓம் பண்டிதர் ஐயா, மகன்ர கடிதத்தை வைத்துக் கொண்டு எங்கட சொந்தக்காரர் எல்லாரும் பெற்றோல் அடிக்கினம். ஆரும் தெரிஞ்சவியள் கேட்டாலும் அந்தக் கடிதத்தைத்தான் கொடுக்கிறம். அனைவரும் வரிசையில காத்து நிற்காமல் பெற்றோல் அடிக்கினம்.

**சாத்திரியார்:** அப்ப ஜூன் முதலாம் திகதி வரை குருச் சந்திர யோகம் எண்டு சொல்லுறியள்.

**விதானையார்:** அது சரி காஸ் சிலிண்டர் வழங்குவதற்காக கிராம சேவையாளர் அலுவலகங்களில பதிவு நடக்குது. நீங்கள் எல்லாரும் பதிவு செய்து போட்டியளோ.

**கங்காணி:** அங்கயும் வரிசைதான். ஆனாலும் பங்கீட்டு அடிப்படையில காஸ் வழங்குகிறது தான் ஒரே வழி. இல்லையெண்டால் ஒரு சிலர் தான் காஸ் சிலிண்டர் வாங்குவினம். மற்றவர்கள் ஏமாந்து போற நிலைமைதான் ஏற்படும்.

**விதானையார்:** அதுக்கும் எரிவாயு ஏஜெண்டுகள் எதிர்ப்பாமே.

**வாத்தியார்:** ஓ! பங்கீட்டு அடிப்படையில எரிவாயுவை வழங்கினால், அவற்றைப் பதுக்கவும் தங்களுக்குத் தெரிந்தவர்களுக்கு மட்டும் கொடுக்கவும் முடியாதல்லோ.

அதால காஸ் ஏஜெண்டுகள் பங்கீட்டு நடைமுறையை எதிர்க்கத்தான் செய்வினம்.

**விதானையார்:** எங்கட மக்கள் சரியா இருந்தா பதுக்கலுக்கு முடிவு கட்ட முடியும்.

**மூப்பர்:** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:** அத்தியாவசியப் பொருட்களை ஆரு பதுக்கி வைத்தாலும் அதுபற்றிய தகவல்களைப் பெற வேணும்.

அது தொடர்பில பொலிஸாருக்குத் தகவல் கொடுத்து அவர்களையும் கூட்டிக் கொண்டு ஒரு பகுதி மக்கள் குறித்த இடத்திற்குச் சென்று, பதுக்கி இருக்கிற அவ்வளவு பொருட்களையும் வெளியால கொண்டு வர வேணும்.

அதோட சம்பந்தப்பட்டவர்களைப் பொலிஸார் கைது செய்யிறதும் கட்டாயம்.

**சாத்திரியார்:** அப்பிடிச் செய்யிறதால பிரச்சினை வராதோ!

**விதானையார்:** என்ன பிரச்சினை வாறது. அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கி வைக்கிறதுதான் பிரச்சினைக்குரியது.

ஒவ்வொரு இடத்திலும் இளைஞர்கள் சேர்ந்தால், இந்தப் பதுக்கல் வேலைக்கு முடிவு கட்டலாம். ஒவ்வொரு வர்த்தக நிலையங்களிலும் வேலை செய்கிறவர்கள் தங்கட நிறுவனத்தில பொருட் பதுக்கல் நடந்தால் அது பற்றித் தகவல் கொடுக்க வேணும்.

**சிறாப்பர்:** அதெண்டால் உண்மை தான். வர்த்தக நிலையங்களில வேலை செய்யிறவர்கள் தங்கட மனச்சாட்சிக்கு அமைவாக, நேர்மையாக நடந்தால் ஒருத்தராலும் பதுக்கல் செய்ய முடியாது.

**வாத்தியார்:** என்னவா இருந்தாலும் உணவுப் பொருட்களைப் பங்கீட்டு அட்டைக்கு வழங்குகிற பொறுப்பை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிட்ட ஒப்படைக்கிறதுதான் பொருத்தமான வழி.

அவ்வாறு செய்தால் விழுந்து கிடக்கிற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் மேல வந்திடும். சங்கங்களில வேலை செய்யிற எத்தனையோ பணியாளர்கள் சம்பளம் போதாமையாலும் சம்பளம் ஒழுங்காகக் கிடைக்காததாலும் பெரும் கஷ்டப்படுகினம்.

**பண்டிதர்:** அப்ப வாத்தியார் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினூடாகவே பொருட் பங்கீட்டை மேற்கொள்ள வேணும் எண்டொரு தீர்மானத்தை எடுப்பம்.

இவ்வாறு பண்டிதர் கூற, குறித்த தீர்மானம் ஆலடியில் ஏகமனதாக நிறைவேற்றப்பட, குறித்த தீர்மானத்தைத் தானும் ஆதரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவிழ்க்க முடியாத சிக்கல்

**1987** இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து வடகிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தவர் வரதராஜ பெருமாள். பிறகு ஏற்பட்ட நெருக்கடி காரணமாக இந்தியாவில் தஞ்சமடைந்து வசித்து வருகிறார். இலங்கையின் பொருளாதார நெருக்கடி குறித்து 1987 இல் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து வடகிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தவர் வரதராஜ பெருமாள். பிறகு ஏற்பட்ட நெருக்கடி காரணமாக இந்தியாவில் தஞ்சமடைந்து வசித்து வருகிறார். இலங்கையின் பொருளாதார நெருக்கடி குறித்து அவர் கூறிய விடயங்கள்.

**➢ "30 ஆண்டுக்காலப் போர்தான் இலங்கையின் நெருக்கடிக்குக் காரணமா?"**


"இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே நெருக்கடிகளுக்கான காரணிகள் திரளத் தொடங்கி விட்டன. போரைக் காரணம் காட்டி இராணுவத்தையும் இராணுவச் செலவுகளையும் அதிகரித்தமை ஒரு பிரதானமான காரணம் என்பதை மறுக்க முடியாது. ஆனால் யுத்தத்தின் பின்னரும் அதே பாணியை அரசாங்கங்கள் கடைப்பிடித்தன. மேலும், இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு ஊழல் மோசடிகள் மிக முதன்மையான காரணமாகும். யுத்தம் முடிகிற பொழுது அரசுக்கடனின் அளவு தேசிய வருமானத்தோடு ஒப்பிடுகையில் மூன்றில் ஒன்றாகவே இருந்தது. இப்போது அதனை 125 சதவிகிதம் ஆக்கிவிட்டார்கள்."


**➢ "இலங்கையின் நெருக்கடியைத் தீர்க்க இந்திய அரசு என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?"**

"இந்திய அரசு என்கிறபோது ஈழத்தவர்களின் நலன்களைப் பொறுத்தவரையில் அது தமிழக அரசையும் உள்ளடக்கியதாகவே நான் பார்க்கிறேன். இந்த நெருக்கடியான காலகட்டத்தில் இந்திய அரசு மிகப்பெரிய அளவில் இலங்கைக்கு உதவிகளைச் செய்து வருகின்றது. தமிழக அரசு இலங்கை மக்களுக்கு உதவி செய்வது தொடர்பாக மேற்கொண்டுள்ள முடிவும் முயற்சிகளும் மிகவும் பாராட்டத்தக்கவை. இலங்கை அரசுடனும், இலங்கையின் பிரதானமான கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரமுகர்களுடனும், இலங்கையின் அனைத்து இனங்களினதும் சமூகத்தலைவர்களோடும் நெருக்கமான, நல்லிணக்கமான, உதவிகரமான உறவுகளை இந்திய நடுவண் அரசு மட்டுமல்ல தமிழக அரசும், தமிழக அரசியல் தலைவர்களும் பேண வேண்டும் எனக்கருதுகிறேன்."

**➢ தமிழர் - சிங்களவர் பிரச்சினை, போருக்குப்பிறகு சிங்களவர் - முஸ்லிம் என்று மாறியதற்கு என்ன காரணம்?**

"தமிழர்களின் முதுகெலும்புகளை முறித்தாயிற்று, இனி அடுத்ததாக வல்லமையுடைய சிறுபான்மைத் தேசிய இனமான முஸ்லிம் சமூகத்தின் முதுகெலும்பை உடைத்துவிட வேண்டுமென்று சிங்கள-பௌத்த பேரினவாதிகள் முயற்சிக்கிறார்கள்"





# என் தண்டனையை அம்மாவும் அனுபவித்தார்

"நான் கொஞ்சம் வெளிக்காற்றை சுவாசிக்கணும்... நிதானமாக மூச்சு விடணும்... நான் என்னைக் கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக்கிறேன்..!"

'31 ஆண்டுகாலச் சிறை வாசத்திலிருந்து விடுதலை கிடைத்திருக்கிறது என விடுதலை குறித்து பேசுகிறார் பேரறிவாளன்.

**➢ "விடுதலை என்கிற அறிவிப்பு வந்த கணம் உங்களுக்கு எப்படியிருந்தது?"**

"மிகவும் மன நிறைவாக இருந்தது. மிக நீண்டதொரு சட்டப் போராட்டம். யாருக்கும் ஒரு சலிப்பைக் கொடுத்துவிடக் கூடிய ஒரு சட்டப் போராட்டம். இந்தப் பயணத்தில் நிறைய முறை விழுந்து, எழுந்திருக்கிறேன். அதற்கான பலன் கிடைத்திருக்கிறது; மனம் நிறைவாக இருக்கிறது. அனைத்தையும் விட, அம்மாவின் மகிழ்ச்சி எனக்குப் பெரிய மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது. நிறையத் துன்பங்களைச் சுமந்தது அம்மா தான். உண்மையைச் சொல்லப்போனால் 31 வருட என்னுடைய தண்டனையை அனுபவித்தது அம்மா தான்!"

**➢ "ஜாமீன் கிடைத்த போதே முதலில் செங்கொடியின் நினைவிடத்துக்குத்தான் சென்றீர்கள். இப்போதும் அறிவிப்பு வந்தவுடனேயே வீட்டுக்கு வெளியே அவரின் புகைப்படத்துக்கு மரியாதை செய்தீர்கள். அதைப்பற்றிச் சொல்லுங்கள்?"**

"என் உயிரோடு கலந்த உணர்வு சார்ந்த விடயமாகத்தான் செங்கொடியை நான் பார்க்கிறேன். செங்கொடியின் மரணம் அப்போதே எனக்கு மிகப்பெரிய வருத்தத்தைக் கொடுத்தது. நாங்கள் பிழைக்க வேண்டும் என்பதற்காக இன்னோர் உயிர் போவது நியாயமில்லை. நான் வாழும் காலம் வரைக்கும் தீராத வலியைக் கொடுக்கக்கூடிய விடயம் அது. செங்கொடி என்னைச் சிறையில் சந்திக்க, பெயர் கொடுத்திருந்தார்கள். ஆனால், அப்போதுள்ள சூழலில் சந்திக்கும் வாய்ப்பு அமையவில்லை.

மரண தண்டனைக் காலத்திலும் கூட, நான் என்னைச் சந்திக்க வரும் அனைவரையும், 'இதெல்லாம் ஒன்றுமில்லை பார்த்துக்கலாம்' என நம்பிக்கையாகப் பேசி அனுப்பி வைப்பேன். ஒருவேளை அன்று நான் சந்தித்திருந்தால், அந்த முடிவுக்கு வந்திருக்க மாட்டார் என்கிற ஆதங்கம், வலி எனக்கு எப்போதும் இருந்து கொண்டேயிருக்கும். வெளியிலிருந்து யாரும் அந்த நம்பிக்கையை ஊட்டவில்லையே என்கிற வருத்தம் உண்டு."

**➢ "உங்களுக்கு ஆறுதல் சொல்ல வருபவர்களுக்கு நம்பிக்கை தந்து பேசுமளவுக்கான மனத்துணிவைச் சிறைக்குள் எப்படிப் பெற்றீர்கள்?"**

"சிறைக்குள் நண்பர்கள், தம்பிகள் என்னை 'பூஸ்டர்' என்று தான் கூப்பிடுவார் கள். நான் எப்போதாவது கொஞ்சம் சோர்ந்து பேசினால் கூட,

'என்ன அண்ணா நீங்களே இப்படிப் பேசுறீங்க?' என்பார்கள். அப்போது தான் என்னைச் சுற்றியி ருந்தவர்கள் என்மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருப்பது எனக்குப் புரிந்தது. குறைந்தபட்சம் அந்த நம்பிக்கையை ஊட்டுகிற மனிதராகவாவது இருக்க வேண்டும் என்பதால் தான், பல நேரங்களில் என் துன்பத்தைக்கூட யாரிடமும் பகிர்ந்து கொள்ளாமல் இருந்தேன்.

**➢ "உங்கள் விடுதலையின் மூலம், மற்ற ஆறுபேரின் விடுதலையும் எளிதாகியிருக்கிறது என்று சொல்லப்படுகிறதே..?"**

"நிச்சயமாக. அவர்கள் ஆறுபேருக்கும் விடுதலையாகக் கூடிய அனைத்து [illegible] இருக்கின்றன. கட்டாயம் அவர்களும் விரைவில் விடுதலை செய்யப்பட வேண்டும். நானும் நம்பிக்கையோடு இருக்கிறேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



### அனுபவபூர்வக் கல்வி

நிலக்கோட்டையில் நீலகண்டன் என்பவருக்கு மூன்று மகன்கள் இருந்தனர். முதல் இரு புதல்வர்கள் விவசாயமும் வியாபாரமும் செய்து வந்தனர்.

ஆனால் மூன்றாவது மகன் முத்து எந்த வேலையும் செய்யாமல் இருந்தது அவனது தந்தைக்கு மிகுந்த கவலையை அளித்தது.

முத்து எல்லோருக்கும் உதவி மனம் குளிரப் பேசி ஊராரின் மனத்தைக் கவர்ந்து விட்டான். கல்யாணம், திருவிழா என்றால் அவன் முதலில் போய் நிற்பான். நன்கொடை வசூலிப்பதில் கெட்டிக்காரன். பிறர் கஷ்டப்பட்டால் காணச் சகியாமல் ஆறுதல் கூறுவான். முத்துவுக்குத் தன் பெண்ணைக் கொடுப்பதாக அதே ஊரிலுள்ள நீலகண்டனின் ஒரு உறவினர் முன் வந்தார். ஆனால் நீலகண்டனோ "என் மகன் ஏதாவது ஒரு தொழிலிலோ உத்தியோகத்திலோ நிலைத்து இருந்தாலே அவனது திருமணத்தை பற்றி யோசிப்பேன்" என்று கூறி விட்டார்.

நீலகண்டன் தன் மகனுக்கு அந் நிலையில் கல்யாணம் செய்து வைத்தால் நிலைமை மேலும் மோசமாகும் என்றே நினைத்தார். முத்துவின் மனம் மாறி அவன் ஏதாவது ஒரு தொழிலை மேற்கொண்டு நிலைத்து அதனை செய்தாலே அவன் வாழ்வில் முன்னேற முடியும் என நினைத்தார். அதனால் தான் நல்ல சம்பந்தம் வந்தும் அவர் "வேண்டாம்" என்று கூறினார். அப்போது அந்த உறவினர் "உங்கள் மகனை நீங்கள் வேத வனத்திலுள்ள விமலானந்தரின் குருகுலத்திற்கு அனுப்புங்கள். அங்கு கல்வி கற்றபின் சிறந்து விளங்குவான்" என்றார்.

நீலகண்டன் விமலானந்தரின் குருகுலம் பற்றி கேள்விப்பட்டிருந்தார். அங்கு கல்வி கற்றவர்களுக்கு அரசாங்கத்தில் உயர் பதவிகள் கிடைக்கின்றன என்றும் ஆனால் கல்வி எப்போது முடியும் என்பதையும் அதற்கு எவ்வளவு பணம் கொடுத்து வரவேண்டும் என்பதனையும் விமலானந்தர்தான் தீர்மானிப்பார் என்பதையும் அவர் விசாரித்துத் தெரிந்து கொண்டார்.

நீலகண்டன் முத்துவை அழைத்துக் கொண்டு விமலானந்தரின் குருகுலத்தை அடைந்தார். விமலானந்தரும் "நான் முதலில் ஒரு பரீட்சை வைத்து அதில் தேறுபவனைத் தான் என் சீடனாக ஏற்பேன். அதற்குப் பிறகே அவனுக்கு இலவசமாக கல்வி அளிப்பதா அல்லது எவ்வளவு பணம் வாங்குவது என்பது பற்றிக் கூறுவேன்" என்றார்.

நீலகண்டனும் "மகனைப் பரீட்சித்து தங்கள் மாணாக்கனாக ஏற்றுக் கொள்ளுங்கள். நான் நீங்கள் குறிப்பிடும் தொகையைக் கொடுக்கத் தயார்" என்றார்.(தொடரும்)

# கம்பராமாயணம்

## சுந்தர காண்டம்




அந்நியரிடமும் அன்பு காட்டி, உறவு கொண்டாடிய உயர்வை எண்ணிப் பார்த்தாள்; ஏழைமை வேடுவன்" என்றும் பாராது, அவனோடு தோழமை கொண்ட உயர் நட்பை நினைத்து மகிழ்ந்தாள்; நட்புக் கொள்ளும் இராமனது ஒப்புயர்வற்ற மனநிலை, அவள் மனக்கண் முன் வந்தது.

நகைச்சுவை நிரம்பிய நிகழ்ச்சி ஒன்று அவளைப் பார்த்துச் சிரித்தது; அந்தணன் ஒருவன், பேராசைக் காரன் வீடு பற்றி எரியும் போது அடுப்புக்கு நெருப்புக் கேட்பது போல நாடிழந்து காடு நோக்கிச் சென்றபோது இராமனிடம் அவன் தானம் கேட்ட நிகழ்ச்சி ஏற்படுத்திய சிரிப்பை நினைவு படுத்திக் கொண்டாள். மழுப்படை ஏந்தி வந்த பரசுராமனைக் கோதண்ட ராமனாக இருந்து அடக்கி ஆணவம் நீக்கியதை நினைத்துப் பார்த்தாள்.

சயந்தன் காக்கை வடிவம் கொண்டு அவர்கள் இடையே புகுந்து அற்ப ஆசையால் அவள் மார்பைக் குத்தி மகிழ்ந்தபோது தருப்பைப்புல் ஒன்று கொண்டே அவனை விரட்ட அவன் கண் ஒன்றினைக் குருடு ஆக்கியது; அச்சோகச் செய்கை அவள் கண் முன் நின்றது.

கரம் பற்றி வானிடை எடுத்துச் சென்ற கிராதகனை வாள் கொண்டு வெட்டிய வீரச் செய்கையை எண்ணிப் பார்த்தாள். பெருமைமிக்க இராமன் செயல்கள் அவளுக்கு ஊக்கம் தந்தன. இடர்ச ிறிதும் நேராமல் காத்த வீரன், தன்னை மீட்க வராதது அவளுக்கு வியப்பாய் இருந்தது; அதற்குக் காரணம் யாதாய் இருக்கும்?

"இலக்குவன் கிழித்த கோட்டை அழித்து விட்டேன்; அதற்காக என்னைத் தன் மனத்தில் அழித்து விட்டானா?" "கொண்டு சென்ற அரக்கன் உண்டு முடித்திருப்பான் என்று அயர்ந்து ஒய்ந்து விட்டானா?"

"பாதுகையை ஏந்திச் சென்ற பரதன், விரதத்தைக் காக்க முடியாமல் வரதனிடம், வந்து திரும்ப அழைத்துச் சென்று விட்டானா?" "இரக்கமற்ற இராவணன் இலங்கை நகரில் என்னைச் சிறை வைத்திருப்பான் என்பதை அறியாமல் திகைத் திருப்பானா?" இத்தகைய வினாக்கள் விநாடிக்கு விநாடி மாறி மாறி அவள் மனத்தில் எழுந்தன.

"அழுத கண்ணோடு அவனையே நினைந்து காத்துக் கொண்டு இருக்கிறாள்" என்ற செய்தியை யார் அவனுக்குச் சொல்லப் போகிறார்கள் என்ற ஏக்கம் அவளை வாட்டியது.

### திரிசடையின் ஆறுதல் மொழிகள்


உறக்கம் இழந்த நிலையில் அவளுக்கு உதவியாய்த் திரிசடை என்பவள் பேச்சுத் துணையாய் இருந்தாள்; அவள் வீடணன் மகள் தன் இடக்கண்ணும் புருவமும் துடிப்பதை அத் தூய சீதை வீடணன் மகளிடம் எடுத்து உரைத்தாள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையின் நிலை எப்படிப் போகப் போகிறது வியாசரே?



அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏறிக் கொண்டே போகிறது. இனி இந்த நாட்டின் மக்கள் என்ன செய்வது சொல்லுங்கள் வியாசரே?

**மிதுலன் — மீசாலை**

**சகோதரர்கள் ஒற்றுமை இல்லாது பிரிந்து வாழ்வதன் காரணம் என்ன வியாசரே?**

ஒரு வீட்டில் பல அறைகள் இருக்கும். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு திறப்பு இருக்கும். அந்தத் திறப்புகள் அனைத்தும் சாவிக் கொத்தாய் ஒருவரிடம் இருக்கும். அந்த ஒருவர் சரியாய் இருந்தால் அனைத்தும் சுபம்.

ஆனால் அநேகர் அவ்வாறு சுபமாய் இருப்பது இல்லை.

சாவிக்கொத்து சரியான இடத்தில் இருக்காதவரை சண்டைகளும் சச்சரவுகளும் இருந்து கொண்டேயிருக்கும்.

**தருஷ் — வடமராட்சி**

**தமிழ் நாட்டு அரசின் உதவிப் பொருட்கள் தமிழருக்குக் கிடைக்குமா வியாசரே?**

உண்மையில் இவ்விடயம் தொடர்பில் மனிதாபிமான ரீதியில் சிந்திக்க வேண்டும்.

இலங்கை முழுவதுமே பொருளாதாரச் சிக்கல் உண்டு.

ஆகவே இன, மத, பேதம் கடந்து பாதிக்கப்பட்ட அனைவருக்குமே இந்த உதவித் திட்டம் வழங்கப்பட வேண்டும்.

அது தமிழர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பது தான் மிக முக்கியமான விடயம்.

தமிழ் நாட்டு அரசு இலங்கைக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் தமிழினம் இலங்கையில் உள்ளது என்பதாலேயே உதித்தது.

இதை உணர்ந்து கொண்டு அந்த உதவித்திட்டம் அனைவருக்கும் கிடைக்கச் செய்வதே சிறந்தது.

**இந்து — யாழ்ப்பாணம்**

**பிரச்சினையை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தெரியவில்லை வியாசரே?**

நிலத்தில் ஊர்ந்து திரியும் எறும்புகளை காலால் நசிப்பதற்கு எப்போதாவது எத்தனித்துள்ளீர்களா?

நீங்கள் தன்னை மிதிப்பதை உணர்ந்த அந்த எறும்பு தப்பிக்க கடும் முயற்சி செய்யும்.

மனிதனுடன் ஒப்பிடுகையில் பல்லாயிரம் கோடி சிறியதாயினும் தன்னைப் பாதுகாக்க இறுதி வரை முயற்சிக்கும்.

இறுதியில் நீங்கள் அதை மிதித்து விட்டால் அது உங்களை கடிப்பதற்கு எத்தனிக்கும்.

உயிரை விடும் காலத்தில் கூட தன்னைப் பாதுகாக்க அது முயற்சித்துக் கொண்டே இருக்கும்.

ஈரறிவு கூட இல்லாத எறும்புகளே தமக்கு வரும் பிரச்சினையை இலகுவாய் கையாள்கிறது எனின், ஆறறிவு கொண்ட மனிதனால் முடியாதா என்ன?

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
021 567 1532
என்ற இலக்கத்திற்கு
SMS செய்யுங்கள்
அல்லது ஆசிரியர், வியாசர் பதிவுகள், வலம்புரிப் பத்திரிகை, இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

**சிவம் — வதிரி**

**அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏறிக்கொண்டே போகிறது. இனி இந்த நாட்டின் மக்கள் என்ன செய்வது சொல்லுங்கள் வியாசரே?**

எமது தேவையை நாமே பூர்த்தி செய்யக்கூடிய வழியைக் கையாள்வது தான் சாலச் சிறந்தது

வீட்டில் இருக்கும் சிறிய இடத்தையேனும் வீணாக்காமல் அதில் பயன்தரக்கூடிய மரக்கன்றுகளை நாட்டி நம் எதிர்காலத்திற்கு வித்திடுவோம்.

அத்துடன் வீட்டுத்தோட்டத்தை மிக விரைவாக செய்யத்தொடங்க வேண்டும்.

அதில் மரவள்ளிச் செய்கையை நாம் மேற்கொள்வது மிகச்சிறந்த செயற்பாடாகும்.

மூன்று மாதங்களில் பலன் தரக்கூடியது அது.

எமது பொருளாதாரம் தற்சார்பு பொருளாதாரமாக இருந்தால் எவரும் எம்மை எதுவும் செய்து விட முடியாது.

**தர்னிஷ் — மடத்தடி**

**வரிசை யுகம் மாற வழி எதுவும் உண்டா வியாசர் மாமா?**

என்னதான் மோட்டார் சைக்கிள் கொள்கலனில் புல்ராங்க் பெற்றோல் இருந்தாலும் பெற்றோல் செட்டில் வரிசையைக் கண்டவுடன் அதில் நிற்கவே மனம் சொல்கிறது.

அவ்வளவுக்கு வரிசை எம்மை ஆட்கொண்டு விட்டது. எதற்கு, எங்கு, எப்படி என்று எதுவும் தெரியாமல் வரிசை வரிசை என்று ஆகிவிட்டது எம் வாழ்வு.

இது அனைத்திற்கும் எம் அன்புக்கினிய வர்த்தகப் பெருமக்களும் ஒரு காரணம். தட்டுப்பாடு வருமுன்னமே பதுக்கல் விளையாட்டை மேற்கொள்வதை அவர்கள் நிறுத்துகிறார்களே இல்லை.

அன்பானவர்களே! தயவுசெய்து கர்மாவைப் புரிந்து கொள்ளுங்கள். குடிப்பதற்கு நீர் இருக்கும். ஆனால் அது தொண்டைக்குள்ளால் இறங்காது. தவித்த முயல் அடிப்பவர்களின் நிலை இதுதான் கவனம்.

**இதழினி — புலோலி**

**இன்றைய இலங்கையின் பொருளாதாரச் சிக்கல் இடியப்பச் சிக்கலிலும் மோசமாக உள்ளதே வியாசரே?**

இந்த இடியப்பச் சிக்கலை சீர் செய்கிறேன் என்று கூறிக் கொண்டு பிரதமராகப் பொறுபேற்றார் ரணில் விக்கிரமசிங்க.

ஆனால் இப்போது அது இடியப்பச் சிக்கலிலும் மிக மோசமான சிக்கலில் வந்து நிற்கிறது.

இந்தச் சிக்கல் இப்போதைக்கு தீரும் என்று யாம் நினைபோமாக இருந்தால் எம்மைப் போல படு முட்டாள்கள் வேறு யாருமாக இருக்க முடியாது.

மக்களின் எழுச்சி மிகத் தீவிரமான போது அதை விடாமல் திட்டம் தீட்டித் தடுத்தவர்களினால் வந்த வினை இது என்பதை மக்கள் நன்கு புரிந்திருப்பார்கள் அவ்வளவே.

**சேந்து — யாழ்ப்பாணம்**

**இலங்கையின் நிலை எப்படிப் போகப் போகிறது வியாசரே?**

அதிக பணவீக்கம் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை மூன்றாவது இடத்தில் இருக்கிறது.

இதில் முதலாவது இடத்தில் சிம்பாவேயும் இரண்டாவது இடத்தில் லெபனானும் இருக்கும் அதேவேளை எங்கேயோ நின்ற இலங்கை சடுதியாக முன்னேறி வெண்கலப் பதக்கத்தை தட்டிச் சென்றுள்ளது.

இன்னும் சில காலத்தில் இலங்கை முன்னேறி சிம்பாவேயை வீழ்த்தி தங்கப்பதக்கத்தை தட்டிச் செல்லும் வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**"நீதன்" குழறி அழுதான். தேம்பித் தேம்பி அழுதான். சத்தமாக அழுதான். அவன் அழுத சத்தத்தில் லீஸா மிரண்டாள். அவளால் அவனைத் திரும்பிப் பார்க்க முடியவில்லை "வாய்விட்டு அழுதுவிடு அகுனா. மனதைத் தேற்றுவதற்கு அழுகை மிகப் பெரிய மருந்து.**

## வலி சொல்லும் தொடர்... 34




அகுனாவின் பேச்சில் தன்மீது கட்டுப்பாடு இல்லாத அச்சம் தெரிந்தது. அது இப்போதைய நிலைமைக்குச் சற்று சாதகமானதுதான் என்று ஜேம்ஸ் உணர்ந்து கொண்டான்.

அகுனா, உனது இந்த நடத்தையால் நீ என்ன சாதித்து விடலாம் என்று நினைக்கிறாய்... இப்படியே எவ்வளவு நேரத்துக்கு இந்த அதிகாரியைப் பிடித்து வைத்திருக்கப் போகிறாய். நீ படித்தவன் அல்லவா... இந்த முகாமிலேயே புத்தியுடையவன் அல்லவா... ஒரு தேசத்தின் போராட்ட இயக்கத்துக்காக அரசியல் வேலை செய்தவன் இல்லையா?"

"பொத்தடா வாயை. அந்தப் புனிதமான விசயங்களை யெல்லாம், உன்னைப்போல துர்நாற்றம்பிடித்த வாயால உச்சரிக்காத. இதுவும் எனக்குப் போராட்டம்தான்."

லீஸாவின் கழுத்து அவள் வியர்வையும், அகுனாவின் வியர்வையும் சேர்ந்து பிசுபிசுத்தன. அகுனா உரத்துக் கத்துகின்ற ஒவ்வொரு வார்த்தையும், லீஸாவுக்குள் பீதியாக இறங்கியது.

அடுத்த கணம், கழுத்தை இறுக்கிவிடுவானோ அல்லது சுவரோடு தனது தலையை மோதிவிடுவானோ என்று அவளுக்கு இதயம் கழுத்து வரை ஏறி ஏறி இறங்குவது போலிருந்தது.

"எனது அண்ணன் செத்த செய்தியை இவ்வளவு காலமும் மறைத்து வைத்தீர்களே நாய்களே... நீயாவது சொல்லியிருக்கலாம்தானே... எத்தனை தடவை, நீ சிகரெட் பிடிக்கும் போதெல்லாம் உனக்குத் தேநீர் ஊற்றித் தந்திருப்பேன்...

உன்னை மரியாதைக்குரிய உத்தியோகத்தனாய் பார்த்திருப்பேன்... கடைசியில் நீயும் அதிகாரத்தில் உள்ளவனை நக்கும் பேர்வழியென்று காண்பித்துவிட்டாய்தானே ஜேம்ஸ்?"

அகுனா கேட்ட கேள்விகள் அனைத்தும், முகத்திலேயே சவுக்கை விட்டெறிந்தது போல ஜேம்ஸின் மீது வந்து விழுந்தன. அவன் கேட்டதில் எந்தத் தவறும் இல்லை என்பது ஜேம்ஸின் மனச்சாட்சிக்குத் தெரியும்.

ஆனால், மனச்சாட்சியை கழற்றிவைத்துவிட்டு, சீருடையை அணிந்து வேலை செய்கிற இடம் தான் இந்த முகாம். ஜேம்ஸ் மாத்திரமல்ல. பாதுகாப்பு அதிகாரிகள், குடிவரவுத்துறை அதிகாரிகள் என்று அனைவருக்கும் இங்கு இதுதான் நிலைமை.

தனது அண்ணன் பற்றிச் சொல்லும்போது அகுனாவின் குரல் உயர்ந்து, கைகள் நடுங்கின. அவனுக்குள் ஆழக்கரைந்து கிடந்த அண்ணனது நினைவுகள் கண்களில் கொப்பளித்தன. அவன் நிலை தடுமாறிக் கத்தினான்.

அந்தக் கோபத்தில் எதை யாவது செய்துவிடுவானோ என்பதை ஜேம்ஸும் லீஸாவும் பெரும் பீதியாக உணர்ந்து கொண்டாலும், இயன்றளவு அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நின்று கொண்டார்கள்.

அகுனாவின் சத்தத்தைக் கேட்டு, அறைக்குள் நுழைய முற்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களை, 'வர வேண்டாம்' என்று ஜேம்ஸ் சைகை காண்பித்தான்.

இதற்கு மேலும் இந்த அறைக்குள் நின்றுகொண்டிருந்தால், நிலைமை மோசமடையலாம் என்று உணர்ந்து, ஜேம்ஸ் வெளியில் போவதற்குத் திரும்பினான். அதற்கு முன்னர் -

"சரி அகுனா, உன் அண்ணன் இறந்த செய்தியை நாங்கள் உனக்குச் சொல்லவில்லைதான். மன்னித்துக்கொள்.

உனது மனநிலை கருதித்தான் அந்த முடிவை இமிக்ரேஸன் எடுத்தது. வேண்டுமென்றே செய்யவில்லை. கடைசியாக என்னை ஒரு தடவை நம்பு. அதற்கு இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?"

ஒரே மூச்சில் கேட்டு முடித்தான். தனது மனநிலை குறித்து ஜேம்ஸ் சொன்னது, அவனுக்குள் ஒரு குற்ற உணர்வாகப் பாய்ந்தது. அதை அவனால் நிராகரிக்க முடியவில்லை. புத்திபேதலித்தவன் போல செயற்பட்டிருந்த அந்த நேரத்திலும், ஜேம்ஸ் சொன்னதில் ஒரு நியாயம் இருந்ததைப்போல அகுனா உணர்ந்தான்.

அகுனா மௌனமாக நின்று கொண்டிருந்த அந்த நேரத்தில, அவனிடமிருந்து எந்த பதிலையும் எதிர்பாராதவனாக, அங்கிருந்து வெளியேறினான் ஜேம்ஸ். அகுனாவுக்கு அது மேலும் ஓர் இழப்பாக இதயத்தில் மோதியது.

திடீரென்று நீதனைக் கட்டியணைத்து அழ வேண்டும் போலிருந்தது அகுனாவுக்கு.

"நீதன்"

குழறி அழுதான்.

தேம்பித் தேம்பி அழுதான்.

சத்தமாக அழுதான்.

அவன் அழுத சத்தத்தில் லீஸா மிரண்டாள். அவளால் அவனைத் திரும்பிப் பார்க்க முடியவில்லை.

"வாய்விட்டு அழுதுவிடு அகுனா. மனதைத் தேற்றுவதற்கு அழுகை மிகப்பெரிய மருந்து. நான் வேண்டுமானால் அணைத்துக்கொள்கிறேன்."

லீஸா சற்றுத் திரும்பவும், அகுனா தன் பிடியை விடுவித்துக்கொண்டு, அருகிலிருந்த சோபாவில் பக்கவாட்டாக விழுந்தான். லீஸா அவனை இயன்றளவு தாங்கியபடி அவனோடு சோபாவில் அமர்ந்தாள்.

தூரத்தில் இதைக் கண்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உள்ளே ஓடி வர...

"குளிர் நீர் மாத்திரம் கொண்டு வாருங்கள் ப்ளீஸ்" என்றாள் லீஸா.

அகுனாவின் வாய் வழியாக நுரை தள்ளியது. சிறிய நடுக்கம் அவன் தலையில் தெரிந்தது.

மெதுவாக எழுந்த லீஸா மருத்துவர்களை உடனடியாக அழைக்கச் சொன்னாள். "ரெஸ்போன்ஸ் ரெஸ்போன்ஸ் கோட் புளூ..."

வானொலிச் சத்தங்கள் முகாமெங்கும் அலறி அடங்குவதற்குள், முகாம் வைத்தியர், தாதியொருவருடனும் தள்ளு வண்டியுடனும் அறைக்குள் ஓடிவந்தார்.

அதற்குள், லீஸாவும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் சேர்ந்து அகுனாவை, பக்கவாட்டாகப் புரட்டி, ஒரு காலை மடக்கி, கையை நீட்டிப் போட்டிருந்தார்கள்.

மருத்துவர் வந்த பிறகும் தலையாட்டத்துடன் நடுங்கியபடி கிடந்த அகுனா, ஒருவாறு நினைவு திரும்பினான். கனவு கலைந்து எல்லோரையும் பாதி மூடிய சிவந்த கண்களால் பார்த்தான்.

மெல்லிய குரலில் "நீதன்..." என்றான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு என்ன நாதனே!

பாணின் விலை கண்டு
குழம்பிய பரமசிவன்
பார்வதியை உடன் அழைத்து
ஆலோசனை கேட்க
அம்மை சொன்ன பதில்
ஐயனை குழப்பியது

முற்றும் உணர்ந்த நாதா
மூவுலகும் ஆள்பவரே
இலங்கை பற்றி நீவீர்
இதுவரை அறியாதது ஏனோ

சமையல் எரிவாயுவும் இல்லை
சாப்பிட உணவும் இல்லை
எரிபொருளும் அங்கு இல்லை
மின்சாரமும் போதியளவு கிடைக்க இல்லை

மாவும்; சீனியும்
பருப்பும்; பால்மாவும்
அரிசியுடன் அத்தனையும்
உச்ச விலையுமாகிட
ஒரு வேளை உணவுக்கு
ஏழைகள் படும் பாடு
உணரவில்லையோ நாதனே

எல்லாம் அவன் செயல் என்று
உங்களில் பழி போடும்
அரசியல்வாதிகள் கண்டு
கோபம் கொள்கிறேன் நாதனே!

அவர் தம் சொகுசு வாழ்வுக்கு
அடித்தது கொஞ்சமா
ஆறு தலைமுறைக்கு சொத்து சேர்த்து
ஆங்காங்கே வீடும் கட்டி
இராஜ போக வாழ்க்கை வாழும்
அரசியல் வாதிகள் சொத்தைப் பறித்தே
நிமிர்த்த வேண்டும் நாடு தன்னை

இருப்பதற்கு வீடுமின்றி
ஒருவேளை உணவுமின்றி
தவித்திடும் ஏழை நிலை கண்டு
கலங்குது மனது நாதனே
இலங்கைக்கு தீர்வு என்ன
இறைவனே சொல்லுங்கள்

யசிதீபன்

## பெற்றால் போதுமே பெற்றோல்!



பெற்றால் போதுமே பெற்றோல்!
பெற்றோர் தவமிருந்து
பெற்றதாய் சொன்னது அன்று!
பெற்றோலுக்காய் தினமும்
தவமிருக்கிறேன் இன்று!

குறைப்பதாய் சொன்ன மகான்
குணத்தினை காட்டிவிட்டான்!
விக்கிர(ம) சிங்கங்களோ
வில்லங்கம் தருகுது பார்!

விலை உயரக் காத்திருந்த
நிலவரைப் பெற்றோலோ
உலை வைக்கும் விலை கண்டு
உள்ளிருந்து ஊற்றெடுக்கும்!

நகரும் பேரணியில்
நாளும் பேரவலம்!
நகரும் வாழ்வாலே
தவிக்குமே மனமெங்கும்!

இரா.ஜெயக்குமார்

## மௌனத்தின் தேடல்- 561



## துயர் ஒலி

பைந்தமிழர் தமிழ் மண்ணில்
பரிதாபகரமாய் பலியானோர்களை
பிரிந்த பாச உறவுகளின்
ஆறாத கவலையின்
தீராத துயரத்தின்
தாங்கொணா அஞ்சலி
நிகழ்வு இது.

தங்கத்தமிழன்,
காரைநகர்.

## போர் வெள்ளம்

முள்ளிவாய்க்காலில் போரிட்ட
போர் அரக்கன்,
அள்ளி தமிழின மக்களின்
உயிர் குடித்தபின்
தள்ளிய எச்சங்களாகிய
உடல்கள் மண்ணுக்குள்
புள்ளி விபரங்கள் உண்மையில்
பலியானோரின் உறவுகளிடம்
துள்ளிக்கொண்டு அநீதி கடலிலிருந்து
நீதி எழும்பும் என சாட்சியும்
காட்சியுமாக நிதர்சனம்

சி.சுகிர்தமலர்,
உரும்பிராய்.

## புதை குழிக்குள்

புதை குழிக்குள் எம் இனத்தை
புதைத்தாய் உயிரோடும்
வதை முகாமில் எஞ்சியதை
வகை தொகையாய் புதைத்தாய்
பகை ஒவ்வா போர் முறைகள்
பதை பதைக்கப் புரிந்தாய் நின்
குகை வாழ்வுப் பரிணாமம்
கொன்றொழிக்கும் உன் இனத்தை


வைகதன்,
கொக்குவில்.

## நினைவலைகள்

ஏய் நந்திக் கடலே உன் அலைகள் ஓயலாம்
எம் நினைவலைகள் ஓய்வதில்லை
கண்களில் இருந்து கண்ணீர் சிந்தி
காவியம் ஒன்று வரைகிறேன்
காலங்கள் மாறலாம் காட்சிகள் மாறலாம்
தமிழர் மனங்களில் போர் வடுக்கள் என்றும் மாறாது
போர் வந்து பேரிடியாய் எமது வாழ்வு
உறவுகள் இழந்து உடைமைகள் இழந்து
உணர்வுகள் இழந்து உரிமைகள் இழந்து
இழப்பதற்கு ஏதும் இன்றி
ஏதிலியாய் எமது வாழ்வு
எமக்கு ஏன் இந்த அநீதி உலகமே
நீதி ஒன்று தாராயோ இறைவா!

கும்பவாழியான்,
[illegible]

## மௌனத்தின் தேடல்- 562




அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## மே 18 2009

இருண்ட நாளாய் தமிழினம்
கொத்துக் கொத்தாய் மடிந்த
நாளாய் மே 18 நாளாம்
நீரின்றி உணவின்றி
உடுப்புடைவையின்றி வீடின்றி
உயிரைப் பாதுகாக்க
பாதுகாப்பு வலயம்
தேடிச் செல்ல
அதே வலயம் தமிழினத்தின்
மயானமாகியதையும்
வார்த்தைகளாலோ வர்ணிக்க
எழுத்துக்களாலோ வர்ணிக்க
முடியாதவர்களாக நாம்

ச.துஷ்யன்,
அத்தியடி.

## வலி நிறைந்த வாழ்க்கை

கனவுகளுடன் கைதனிலே
ஆயுதங்களை ஏந்தி
வீரர்களாய் கல்லறை நோக்கிய
ஆறிடா அற்புத ஆணி முத்துக்களே
உங்கள் நினைவுச் சின்னமோ
கைகள் தனை உயர்த்தி
வான் நோக்கிடும் வேளை
உருவம் இல்லா உயிராய் நீங்களும்
நீதியும் சாகடிக்கப்பட்டது ஏனோ?

ஆ.பாலமதுஜா,
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## இன்பத்தில் துன்பம்




அந்த வருத்தம் செவ்வரிபடர்ந்த மஞ்சளழகியின் கண்களில் நன்றாகத் துளிர்த்துக் கிடந்தது. அவள் முழுமதி முகத்தையும் சஞ்சல மேகமொன்று படர்ந்து மெள்ள மகிழ்ச்சிக் களையை மறைத்தது. அவன் திருப்பத் திருப்ப இருமுறை நகைத்ததை அவள் மௌனத்துடனும் வருத்தத்துடனும் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

ஆழமான இதயத்தை உடையவனும் அகூதாவின் சபதத்தைக் கேட்டது முதல் கிலி பிடித்துக் கிடந்தவனுமான அவள் தந்தையும் அந்தக் கிலியை மறந்து இளையபல்லவனை மிகுந்த வெறுப்புடன் நோக்கினான்.

இரவு வந்தால் நேரிட இருப்பதை அறியாமல் இவன் நகைக்கிறானே என்ற எண்ணத்தால் அக்ஷய முனைக் காவலன் இதயத்தில் அந்த விநாடி துளிர்த்தது அனுதாபமில்லாவிட்டாலும், "இவன் பிடிவாதத்தால் இன்றிரவு அக்ஷயமுனையில் பெரும் பிரளயம் ஏற்படுமே" என்ற நினைப்பால் பெரும் பயமே எழுந்து நின்றது. ஆகவே பயமும் வெறுப்பும் கலந்த பார்வையொன்றை அவன் இளையபல்லவன் மீது வீசினான்.

இடம், பொருள், ஏவல் ஆகிய எதையும் கவனிக்காமல் அத்துமீறி இருமுறை நகைத்த சமயத்திலும் இயைபல்லவன் கண்கள் மட்டும் எதிரேயிருந்த இருவர் முகங்களையும் ஆராய்ந்து கொண்டிருந்த தன் விளைவாக, அவ்விரண்டிலும் ஏற்பட்ட மாறுதல்களைச் சிரிப்புக்கு இடையே அவன் கவனிக்கத் தவறவில்லையாகையால் மஞ்சளழகி விளக்கிய இரவு நிகழ்ச்சி மேலுக்குத் தோன்றியது போல் அத்தனை இன்பமானதாயிருக்க முடியாதோ என்னவோ என்ற சந்தேகம் அவனையும் பீடிக்கலாயிற்று.

அதுவும் மஞ்சளழகியின் வதனத்தில் படர்ந்த பரிதாபமும் சஞ்சலமும் அவன் சந்தேகத்தைக் தூண்டிவிடவே தனது நகைப்பை அடக்கிக் கொண்டு சில விநாடிகள் மஞ்சளழகியைக் கூர்ந்து நோக்கி விட்டுக் கேட்டான். தேவி! அக்ஷய முனைக் கோட்டை பெரும் மர்ம கூடம் போலிருக்கிறதே?" என்று.

மஞ்சளழகி தன் விழிகளைச் சற்றே உயர்த்தி அவனை நோக்கினாள். அவற்றில் விரிந்து கிடந்த துயரம் குரலிலும் ஒலிக்க, "ஆம்" என்று ஒரே வார்த்தையில் பதில் சொன்னாள் அவள். அந்த ஒரு வார்த்தையில் பதிந்து கிடந்த அனுதாபம் இளையபல்லவன் இதயத்தை ஊடுருவிச் சென்றது.

சில நாழிகைகளுக்கு முன்பே சந்தித்த, முன்பின்னறியாத அந்தப் பெண் தன்னிடம் காட்டும் அனுதாபத்துக்குக் காரணம் புரியாமல் அவன் தவித்தான். எதிர்பாராத அனுதாபமும் அன்பும் அவளிடம் தனக்கு ஏற்பட்டிருப்பதை உணர்ந்த அவன் பெரிதும் குழம்பினான். பெரும் வியப்புக்கும் உள்ளானான்.

பெண்களைப் பார்த்ததும் உணர்ச்சிவசப் படக்கூடிய சுபாவம் உள்ளவனல்ல இளையபல்லவன். சென்ற ஓர் ஆண்டு காலத்தில் பல நாடுகளுக்குச் சென்று பல அழகிகளைப் பார்த்தும் சலிக்காத அவன் மனமும் மஞ்சளழகியின் அபூர்வ எழிலில் மட்டுமல்ல அவள் பார்வையில், குரலில், அனைத்திலும் ஓரளவு லயிக்கவே செய்தது. ஆகவே சற்று சஞ்சலத்துடனேயே அவன் மீண்டும் கேட்டான். "அத்தனை மர்மங்களில் நீங்கள் சொன்ன இரவு நிகழ்ச்சி, அதுதான் அந்த இன்பக் காட்சி, அதுவும் சேர்ந்ததுதானா?" என்று.

"ஆம்"? என்று மீண்டும் ஒரே வார்த்தையில் பதில் சொன்னாள் அவள்.

"இன்றிரவு முழு மதியின் நிலவின் நீங்கள் நடனமாடப் போவதாகச் சொன்னீர்களல்லவா?" என்று அவன் வினவினான் குரலில் குழப்பம் ஒலிக்க.

"ஆம் சொன்னேன்," மிகவும் தீனமாகவே வந்தது அவள் பதில்.

"உங்களுடன் பல சேடிகளும் சேர்ந்து ஆடுவார்கள் என்று கூறினீர்கள்..." என்று மேலும் தொடர்ந்தான் இளையபல்லவன்.

"ஆம் கூறினேன்." இந்தப் பதிலிலும் மகிழ்ச்சி ஒலிக்கவில்லை அவள் குரலில்.

"என்ன விந்தை! முழுமதி நிலவு, அப்சரஸ் போன்ற ஒரு பெண் ஆடுகிறாள். அவளைச் சுற்றிலும் அழகிகளும் ஆடுகிறார்கள். அப்படியிருந்தும் அதில் துன்பமா? என்ற இளையபல்லவனின் குரலில் ஆச்சரியம் எல்லை கடந்து ஒலித்தது.

"ஆம், துன்பந்தான்," என்றாள் மஞ்சளழகி உறுதியுடன்.

"இந்த நாட்டு நடனக் காட்சி அத்தனை துன்பமான காட்சியா!"

"இல்லை, வாஜாங் என்ற வாஜாங் நடனத்தைவிட இன்பம் தரும் கலைக்காட்சி உலகத்தில் எதுவுமில்லை." இதைச் சொன்ன போது மஞ்சளகியின் கண்களில் புத்தொளியொன்று பளிச்சிட்டது. நடனத்தை நினைத்த மாத்திரத்தில் அவள் உடலெங்கும் மயிர்கூச்செறிந்தது. முகத்திலிருந்த சஞ்சலங்கூடச் சிறிது மறைந்தது.

அவள் முக மாறுதல்களை அவன் கவனிக்கத்தான் செய்தான். நாட்டியத்தை நினைத்ததுமே அவள் முகத்தில் ஏற்பட்ட புதுப்பொலிவையும் கண்டான். அவள் உடலிலேயே நாட்டியம் ஊறிக்கிடக்கிறதென்பதைப் புரிந்து கொண்டான். ஆகவே அந்த நாட்டியத்தைப் பற்றிய தகவல்களையும் அதனால் ஏற்படக் கூடுமென அவன் எதிர்பார்க்கும் விபரீத விளைவுகளையும் அறிந்து கொள்ள அவன் மேலும் பேச்சைத் தொடர்ந்து, "வாஜாங்கா, வாயாங்கா.. ஏதோ நாட்டிய முறை சொன்னீர்கள்..." என்று ஆரம்பித்தான்.

அவனை இடைமறித்த மஞ்சளழகி, "இரண்டு விதமாகவும் அதை அழைப்பதுண்டு. வாஜாங் வாயாங் இரண்டும் ஒரே நாட்டிய முறை, சொர்ணத்தீவின் தேசிய சொத்து. கலைச்சிகரம் அது," என்றாள்.

"அதிலென்ன, துன்பகரமான காட்சிகளைத்தான் ஆடுவீர்களா?" என்று கேட்டான் இளையபல்லவன்.

"இல்லை இல்லை" என்று சட்டெனப் பதில் சொல்லிய மஞ்சளழகி, "மிக இன்பமான காட்சிகளைத்தான் ஆடுவோம்." என்றாள்.

"இன்பமான காட்சிகளா!"

"ஆம், புராணக் கதைகள்ள ஆடுவோம். வேறு வகை வீர, காதற் சுவைக் கதைகளையும் ஆடுவோம்" என்று அவள் நாட்டியத்தை நினைக்க நினைக்க உணர்ச்சி மேலிட்டுப் பேசினாள்.

அவள் உணர்ச்சிகளை மேலும் தூண்டக் கேட்டான் அவன், புராணக் கதைகளா? இந்த ஊருக்கென்று தனிப் புராணங்கள் உண்டா?" என்று.

"இல்லை. தனிப்பட்ட புராணங்கள் கிடையாது. இராமாயண, மகாபாரதக் கதைகளைத்தான் ஆடுகிறோம்" என்று அவள் கூறினாள்.

"அவை எங்கள் நாட்டுப் புராணங்களாயிற்றே!"


"ஆம், அந்தப் புராணங்கள்தான் இங்கும் நடமாடுகின்றன. பாரதத்தின் புராணங்களாலும் கலைகளாலும் புத்துயிர் பெற்றது சொர்ணபூமி. சொர்ண பூமியின் தீவுகளில் முதலில் பாரதத்தின் ஸநாதன தர்மமும் பிறகு புத்த மதமும் பரவின. நீங்கள் ஊன்றிப் பார்த்தால் உங்கள் நாட்டுக் கலாசாரத்துக்கும் இந்த நாட்டுக் கலாசாரத்துக்கும் அதிக வேற்றுமையிருக்காது.

பாரதத்திலிருந்து வந்த கலைகள் இங்குள்ள கலைகளுடன் பிணைந்தன, பாலுடன் தேன் கலந்தது போல். பழைய வாஜாங்கில் நிழலாட்டந்தான் காட்டுவார்கள். பரத நாட்டியம் கலந்த பிறகு நடனக் கலைஞர்கள் நேரிடையாக ஆடுகிறார்கள். வாஜாங்கில் இருவகை உண்டு வாஜாங் பூர்ணா என்பது புராணக் காதற் கதைகளை ஆடுவது. வாஜாங் கோதக் என்பது வேறு வகை காதற் கதைகளை ஆடுவது இரண்டும் மகோன்னதமாயிருக்கும் இளையபல்லவரே. வாஜாங் நிகரற்ற நாட்டியமுறை. அதன் பின்னிசை பிரம்மிக்கத்தக்கது. வெளிச் சூழ்நிலையில் ஆடப்படும் இந்த நடனத்தைப் பார்த்த பின்பு நீங்களே புரிந்து கொள்வீர்கள்." (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : அவள் ஒரு தொடர்கதை
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : எஸ்.ஜானகி



கண்ணிலே என்ன உண்டு
கண்கள் தான் அறியும்
கண்ணிலே என்ன உண்டு
கண்கள் தான் அறியும்

கல்லிலே ஈரம் உண்டு
கண்களா அறியும்
கல்லிலே ஈரம் உண்டு
கண்களா அறியும்
என் மனம் என்னவென்று
என்னை அன்றி யாருக்கு தெரியும்
கண்ணிலே...

நெருப்பென்று சொன்னால்
நீரிலும் அணையும்
நீர் என்று சொன்னால்
நெருப்பிலும் வேகும்

நான் கொண்ட நெருப்பு
அணைக்கின்ற நெருப்பு
நான் கொண்ட நெருப்பு
அணைக்கின்ற நெருப்பு
யார் அணைப்பாரோ
இறைவனின் பொறுப்பு
என் மனம் என்னவென்று
என்னை அன்றி யாருக்கு தெரியும்
கண்ணிலே....

சேலைக்குள் ஆடும்
மங்கையின் மேனி
மேனிக்குள் ஆடும்
மனம் எனும் ஞானி

ஞானியின் மனமும்
ஆசையில் தேனி
ஞானியின் மனமும்
ஆசையில் தேனி
நான் ஒரு ராணி
பெண்களில் ஞானி
என் மனம் என்னவென்று
என்னை அன்றி யாருக்கு தெரியும்

கோடையில் ஒரு நாள்
மழை வர கூடும்
கோயில் சிலைக்கும்
உயிர் வர கூடும்

காலங்களாலே
காரியம் பிறக்கும்
காரியம் பிறந்தால்
காரணம் விளங்கும்
என் மனம் என்னவென்று
என்னை அன்றி யாருக்கு தெரியும்
கண்ணிலே...

கல்லிலே ஈரம் உண்டு
கண்களா அறியும்
கல்லிலே ஈரம் உண்டு
கண்களா அறியும்
என் மனம் என்னவென்று
என்னை அன்றி யாருக்கு தெரியும்

# குடிபோதை, சர்ச்சை மட்டும் தான் சைமண்ட்ஸா?

ஷேன் வோர்னே இறப்பின் அதிர்ச்சியிலிருந்தே இன்னும் மீளவில்லை. அவருக்கே இன்னும் கண்ணீர் சிந்தி முடிக்கவில்லை. அதற்குள் அவுஸ்திரேலியாவிலிருந்து இன்னொரு இறப்பு செய்தி வந்திருக்கிறது. அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரரான ஆண்ட்ரூ சைமண்ட்ஸ் (Andrew Symonds) கார் விபத்தில் புலியாகியிருக்கிறார்.

90 களின் கடைசிக்கட்டம் தொடங்கி 2010 வரைக்குமான கிரிக்கெட் உலகம் அவுஸ்திரேலியாவின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்தது. அவர்களின்றி ஓர் அணுவும் அசையாது. முழுமையாக ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தனர். அத்தனை அணிகளையும் அடித்துத் துவைப்பார்கள். தங்களின் சொந்த நாட்டு அணியின் கரங்களை இன்ச் அளவு கூட உயர்த்த விடாமல் அவுஸ்திரேலியா புரட்டி எடுக்கும்போது கடுப்பாக இருந்தாலும் அதைக் கடந்து அந்த அணி மீது எல்லா நாட்டு ரசிகர்களுக்கும் ஒருவித ஈர்ப்பு இருக்கும்.

அந்த நாட்டு வீரர்களின் மீது தங்கள் நாட்டு வீரர்களைத் தாண்டிய ஒரு பிரமிப்பும் இருக்கும். அந்த அவுஸ்திரேலிய அணிக்குள் பட்டாலும் பந்தாலும் மட்டுமல்ல, சர்ச்சைகளாலும் அனைவரையும் பிரமிப்படைய வைத்தவர்தான் சைமண்ட்ஸ்.

ஜடா முடி, உதடுகளில் கிரீம் என ஆளே ஒரு வித்தியாசமான ஸ்டைலில், கூட்டத்திலிருந்து தனித்த ஓர் ஆளாகத் தெரிவார். 90 களின் தொடக்கக் காலத்தில் உள்ளூர் போட்டிகளில் அதிரடி சூரராக எதிரணி பௌலர்களை புரட்டியெடுத்துக் கொண்டிருந்தார்.

ஒரு போட்டியில் முதல் இன்னிங்ஸில் 16 சிக்ஸர்கள், இரண்டாம் இன்னிங்ஸில் 4 சிக்ஸர்கள் என மொத்தமாக 20 சிக்ஸர்களைப் பறக்கவிட்டிருந்தார். ஒரே போட்டியில் அதிக சிக்ஸர்களை அடித்ததற்கான சாதனையாக இது நீண்ட காலம் நிலைத்திருந்தது.

இத்தகைய அதிரடியான பட்டிங்கோடு மிதவேகம் மற்றும் ஆஃப்ஸ்பின் வீசும் திறனும் கொண்டவராக சைமண்ட்ஸ் இருக்க, ஜாம்பவான்களாக நிரம்பியிருந்தாலும் அடுத்தகட்ட அணியை உருவாக்கி வைப்பதில் கவனம் செலுத்தும் அவுஸ்திரேலிய அணி சைமண்ட்ஸுக்கு அழைப்பு விடுத்தது.

1998 இல் அவுஸ்திரேலிய அணிக்காக அறிமுகமானார். முதல் ஒன்றிரண்டு ஆண்டுகள் அவருக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கவே இல்லை. 2000 ஆம் ஆண்டிற்கு பிறகே சைமண்ட்ஸுக்கு தொடர்ச்சியான வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றன. மிடில் & லோயர் மிடில் ஆர்டரில் இறங்கி ஹார்ட் ஹிட்டிங் பட்ஸ்மேனாக அதகளப்படுத்தத் தொடங்கினார். மைக்கேல் பெவன் மாதிரியான வீரர்கள் தங்கள் கரியரின் கடைசிக்கட்டத்தில் இருந்ததால் சைமண்ட்ஸுக்கான முக்கியத்துவம் அதிகமானது.


2003 உலகக்கோப்பையில் சைமண்ட்ஸின் பங்களிப்பை மறக்கவே முடியாது. அவுஸ்திரேலிய அணி தனது முதல் போட்டியிலேயே பாகிஸ்தானை எதிர்கொண்டிருக்கும். ஜோஹனஸ்பர்க்கில் நடந்த அந்தப் போட்டியில் 143 ரன்களை அடித்து நொட் அவுட்டாக இருந்திருப்பார். வாசிம் அக்ரம், வக்கார் யுனிஸ், சோயிப் அக்தர் என பாகிஸ்தானின் புயல் வேகங்களைச் சிதறடித்திருப்பார். கடைசி வரை அவர்களால் சைமண்ட்ஸை வீழ்த்த முடிந்திருக்காது.

அவுஸ்திரேலியாவை தனி ஆளாக 300+ ஸ்கோருக்கு நகர்த்திச் சென்றிருப்பார். அந்தப் போட்டியை அவுஸ்திரேலியா சிறப்பாக வென்று மீண்டும் ஒரு உலகக்கோப்பையை வெல்வதற்கான பயணத்தை மிரள வைக்கும் வகையில் தொடங்கியிருக்கும். உலகக்கோப்பைத் தொடர்களில் சைமண்ட்ஸுக்கு இதுதான் முதல் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச போட்டிகள் மட்டுமின்றி, ஐ.பி.எல்லிலும் சில சீசன்களில் அசத்தினார். இவர் ஆடிய போதுதான் டெக்கான் சார்ஜர்ஸ் அணி சம்பியனும் ஆகியிருந்தது. 2010 சீசனில் 400+ரன்களை எடுத்து 10 விக்கெட்டுகளையும் சேர்த்துத் தூக்கிச் சிறப்பித்திருப்பார்.

பட்டாலும் பந்தாலும் இத்தனை முக்கியத்துவம் வாய்ந்த வீரராக இருந்தாலும் சைமண்ட்ஸ் என்ற பெயரை கேட்டவுடன் அவரால் ஏற்பட்ட சர்ச்சைகள்தான் முதலில் நினைவுக்கு வரும். இந்திய ரசிகர்களுக்குச் சொல்லவே வேண்டாம். ஹர்பஜனுக்கும் சைமண்ட்ஸுக்கும் இடையே பற்றி எரிந்த மோதல் இன்னும் அனைவருக்கும் நினைவில் இருக்கும். அவுஸ்திரேலிய அணியில் ஒழுங்கற்று காணப்பட்ட வீரர்களில் முக்கியமானவராக சைமண்ட்ஸ் இருந்தார். எங்கே சென்றாலும்பிரச்சினைதான். மைதானம், ட்ரெஸ்ஸிங் ரூம், பப் என அவரின் இருப்பு புலப்படும் இடமெல்லாம் சர்ச்சைகளால் சூழ்ந்தது. பப்பில் குடித்து விட்டு ரசிகருடன் மோதலில் ஈடுபட்டது, போட்டிக்குத் தயாராகாமல் குடி போதையில் மூழ்கி போட்டியிலிருந்தே விலக்கப்பட்டது, டீம் மீட்டிங்கிற்கு வராமல் மீன் பிடிக்கச் சென்றது என வரைமுறையே இன்றி சரமாரியாக அவுஸ்திரேலிய கப்டன்கள் மற்றும் கிரிக்கெட் போர்டின் கோபத்தை சம்பாதித்தார்.

"Monkey Gate" சம்பவம் தான் சைமண்ட்ஸின் வீழ்ச்சியின் தொடக்கம் என ரிக்கி பொண்டிங்கே கூறியிருக்கிறார். தொடர் சர்ச்சைகளால் அவுஸ்திரேலிய கிரிக்கெட் போர்ட் சைமண்ட்ஸை ஒதுக்கத் தொடங்கியது.



சைமண்ட்ஸ் எந்தச் சலசலப்புகளுமின்றி வகுத்து வைக்கப்பட்டிருந்த நேர் கோட்டிலேயே பயணப்பட்டிருந்தால் அவரின் கிரிக்கெட் பயணம் இன்னும் நீண்டதாகக்கூட அமைந்திருக்கும். ஆனால், அதற்கு வாய்ப்பில்லாமல் அதிர்ச்சியளிக்கும் வகையில் இந்த கார் விபத்தை போன்றே அவரின் கரியரும் முடிவுக்கு வந்தது சோகம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரலாகும் தனுஷின் ஹொலிவுட் பட டிரைலர்

தனுஷ் நடிப்பில் உருவாகியுள்ள 'தி கிரே மேன்' ஹாலிவுட் பட்த்தின் டிரைலர் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

ஹொலிவுட்டில் நடிகர் தனுஷ் நடிப்பில் உருவாகி வரும் படம் 'தி கிரே மேன்'. அவெஞ்சர்ஸ் இன்பினிட்டி வார், அவெஞ்சர்ஸ் என்ட்கேம், கேப்டன் அமெரிக்கா விண்டர் சோல்ஜர், சிவில் வார் போன்ற படங்களை இயக்கிய ரூஸோ சகோதரர்கள் இப்படத்தை இயக்கி உள்ளனர்.

இதில் தனுசுடன் கேப்டன் அமெரிக்கா கதாபாத்திரத்தில் நடித்து பிரபலமான கிறிஸ் ஈவான்ஸ் மற்றும் லா லா லேண்ட், பர்ஸ்ட் மேன் ஆகிய படங்களில் கதாநாயகனாக நடித்த ரயன் காஸ்லிங் ஆகியோரும் நடித்துள்ளனர். இப்படம் 2009 இல் வெளியான "தி கிரே மேன்" என்ற நாவலை தழுவி அதே தலைப்பில் உருவாகிறது. 'தி கிரே மேன்' படத்தை நெட்பிளிக்ஸ் நிறுவனம் பிரம்மாண்ட பொருட் செலவில் தயாரித்துள்ளது. சமீபத்தில் இப்படத்தின் தனுஷ் கதாபாத்திரத்தின் போஸ்டர் வெளியாகி ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில் "தி கிரே மேன்" படத்தின் டிரைலரை தனுஷ் அவருடைய சமூக வலைத்தளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். டிரைலரில் அதிகமான காட்சிகளில் தனுஷ் இடம் பெறவில்லை என்றாலும் அவருடைய ரசிகர்கள் இதனை வைரலாக்கி வருகின்றனர். பெரும் எதிர்பார்ப்பில் வெளியாகியுள்ள இந்த டிரைலர் தற்போது ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இப்படம் நெட் ஃப்ளிக்ஸ் ஓடிடி தளத்தில் ஜூலை 22 ஆம் திகதி வெளியாகவுள்ளது.

# நாட்டிய பேரொளி பத்மினி



### வாழ்க்கைக் குறிப்பு

திருவனந்தபுரத்தில் பூஜாப்புர பகுதியில் பிறந்த பத்மினியின் பெற்றோர் தங்கப்பன், சரஸ்வதி ஆவர். இவரது மூத்த சகோதரி லலிதா, இளையவர் ராகினி இருவரும் புகழ் பெற்ற நாட்டிய நடிகைகள். இவர்கள் திருவாங்கூர் சகோதரிகள் என அழைக்கப்பட்டனர். இவர்களது பெரிய தாயாரின் கலை ஆர்வமே இவர்களை நடனத்தில் ஈடுபடச் செய்தது. பெரிய தாயாருக்கு மலாயாவில் இரப்பர் தோட்டங்கள் உள்ளன. திருவாங்கூரில் பல தொழில் நிறுவனங்களில் இயக்குநராக இருந்தவர். மற்றொரு பெரிய தாயார் திருவாங்கூர் மகாராணியின் சகோதரரின் மனைவி. திருவாங்கூர் சகோதரிகளின் சகோதரர் பெயர் சந்திரசேகர் ஆகும். பத்மினி 1961 ஆம் ஆண்டு, டாக்டர் இராமச்சந்திரன் என்பவரை மணந்தார். பிறகு 1977இல் அமெரிக்காவில் நியூ ஜெர்சியில் குடியேறினார். அங்கு பத்மினி ஸ்கூல் ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸ் என்ற அமைப்பை நிறுவி நாட்டியம் பயிற்றுவித்தார்.

### கலையுலக வாழ்வு

பத்மினி நான்கு வயதில் நாட்டியம் ஆடப்பயின்றார். முதலில் சகோதரிகள் திருவாங்கூர் நடன ஆசிரியர் கோபிநாத்திடம் பயிற்சி பெற்றனர். கதகளி, பரதம், மணிப்புரி ஆகிய மூன்று ஆடல் கலைகளிலும் பயிற்சி பெற்றனர். பத்து வயதில் அரங்கேறி, ஏறக்குறைய 64 ஆண்டுகள் நாட்டிய உலகில் புகழோச்சி நாட்டியப் பேரொளி என அழைக்கப்பட்டார். குச்சிப்புடி, மோகினியாட்டத்திலும் வல்லவர்.

17 வயதில் திரையுலகில் புகுந்தார். இயக்குனர் உதயசங்கர் தனது கல்பனா என்ற இந்தி மொழிப் படத்தில் முதலில் இவர்களை நடிக்க வைத்தார். ஆனாலும், இவர்கள் நடனமாடி வெளிவந்த முதல் திரைப்படம் கன்னிகா (1947) என்பதாகும். இப்படத்தில் சிவமோகினி வேடத்தில் நடனமாடினார். பின்னர் வேதாள உலகம் படத்தில் நடனமாடினார். என். எஸ். கிருஷ்ணன் தயாரித்த மணமகள் என்ற படத்தில் நடித்தார்.இவை தவிர சிலோன் தியேட்டர்சின் கபாடி அரப் சகாயா என்ற சிங்களப் படத்திலும் நடனமாடினார்கள். தமிழில் சிவாஜி கணேசன், எம். ஜி. இராமச்சந்திரன், ஜெமினி கணேசன் என அனைத்து முன்னணி நடிகர்களுடனும் இவர் நடித்திருக்கிறார். பத்மினி 250 படங்களுக்கு மேல் நடித்தார். சிவாஜியுடன் மட்டும் 59 படங்களில் நடித்துள்ளார். தில்லானா மோகனாம்பாள், இவரின். நடிப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டாக சொல்லத்தக்க திரைப்படம் ஆகும். இத்திரைப்படத்தில் சிக்கல் சண்முகமாக சிவாஜி கணேசனும், மோகனாங்கியாக பத்மினியும் நடித்தனர். வஞ்சிக் கோட்டை வாலிபனில் பத்மினிக்கும், வைஜயந்திமாலாவிற்கும் நடக்கும் நாட்டியப்போட்டிக் காட்சி புகழ் பெற்றது.

# 100 கோடி வசூலை தாண்டிய டான்



சிவகார்த்திகேயன் தொட்டது எல்லாம் வெற்றி தான் என்ற கொண்டாட்டத்தில் உள்ளார். அவரது நடிப்பில் கடந்த வருடம் வெளியான டாக்டர் திரைப்படம் யாரும் எதிர்ப்பார்க்காத அளவிற்கு மாஸ் வசூல் செய்தது.

அவரது திரைப்பயணத்தில் அதிகம் வசூலித்த படம் என்ற பெருமையை பெற்றது.

தற்போது அந்த வரிசையில் டான் திரைப்படம் வந்து கொண்டிருக்கிறது. இப்படம் ரிலீஸ் ஆன 12 நாட்களில் உலகம் முழுவதும் ரூ. 100 கோடி வரை வசூலிக்க படத்தை தயாரித்த லைகா நிறுவனமே அதிகாரப்பூர்வமாக வசூல் நிலவரத்தை வெளியிட்டார்கள். தமிழ்கத்தில் மட்டும் இந்த வாரத்தில் சிவகார்த்திகேயனின் டான் இவ்வளவு வசூலிக்குமா?

தமிழகத்தில் முதல் வார முடிவில் டான் திரைப்படம் ரூ. 22:85 கோடி வசூலித்த படம் மொத்தமாக இது வரை ரூ. 70.85 கோடி வரை வசூலித்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த வார முடிவில் படம் தமிழகத்தில் ரூ. 75 கோடி வரை வசூலை எட்டும் என கணக்கிடப்படுகிறது.

# பிகில் ராயப்பன் கதையை தூசு தட்டும் அட்லி



விஜய் நடிப்பில் வெளியான 'தெறி', 'மெர்சல்' மற்றும் 'பிகில்', படங்களை இயக்கிய அட்லியின் பதிவு வைரலாகி வருகிறது.

2013-ம் ஆண்டு வெளியான ராஜா ராணி படம் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் அட்லி. அதன்பின் விஜய் நடித்த 'தெறி', 'மெர்சல்' மற்றும் பிகில் ஆகிய திரைப்படங்களை இயக்கிய பிரபலமடைந்தார். அட்லி தற்போது ஷாருக்கான் நடித்துவரும் 'கிங்' என்ற படத்தை இயக்கி வருகிறார். இதில் நயன்தாரா கதாநாயகியாக நடித்து வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு மும்முரமாக நடைபெற்று வருகிறது.

இவர் இயக்கிய பிகில் திரைப்படம் அனைவரையும் கவர்ந்து நல்ல வரவேற்பை பெற்றது. இதில் ராயப்பன், மைக்கேல் என இரட்டை வேடங்களில் விஜய் நடித்திருந்தார். குறிப்பாக இப்படத்தில் இடம்பெற்ற ராயப்பன் என்ற கதாப்பாத்திரம் விஜய் ரசிகர்கள் மட்டுமல்லாது ஒட்டுமொத்த சினிமா ரசிகர்களையும் கவர்ந்தது. இந்நிலையில் அட்லியின் சமீபத்திய பதிவு ஒன்று ஒட்டுமொத்த ரசிகரையும் திசை திருப்பியுள்ளது. அமேசான் ஓடிடி தளத்தின் சமூக வலைத்தளப்பக்கத்தில், பிகில் ராயப்பன் புகைப்படத்தை பகிர்ந்து, ராயப்பன் கதையை மட்டும் வைத்து ஒரு முழு படம் உருவானால் எப்படி இருக்கும் என்று நினைத்து பாருங்கள் என்று பகிரப்பட்டது. இதற்கு பதிலளித்த இயக்குனர் அட்லி, "செஞ்சிட்டா போச்சு" என்று பதிவிட்டுள்ளார்.

அட்லியின் இந்த பதிலால் விஜய் ரசிகர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர். விரைவில் விஜய்யும், அட்லியும் இணைந்து பணியாற்ற உள்ளதாக கூறப்பட்டு வந்த நிலையில், இவரின் இந்த பதிவு, இருவரும் இணைந்து பணிபுரிய இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளதாக ரசிகர்கள் தெரிவித்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் சில அதிசயங்கள்...

குடைவு வரைகலை பாணியில் உருவாக்கப்பட்ட சிற்பங்கள் அடங்கிய 34 குகைகள் இந்த பகுதியில் அமைந்துள்ளன. கி.பி 5 ஆம் நூற்றாண்டுக்கும் 10 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் ராஷ்ட்ரகுடா, சாளுக்கியா, கலச்சூரி பேரரசுகள் காலத்தில் இவை உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றில் 12 பௌத்த குகைகள், 17 இந்துக் குகைகள், 5 சமண குகைகள் உள்ளன. இந்துக் குகைகளில் கைலாச நாதர் குகை நுட்பமான சிற்பங்கள் அடங்கிய முக்கியமான குகை ஆகும். சிவன் மற்றும் நந்தியின் உருவங்கள் காணப்படுகின்றன.

பௌத்த குகைகளில் துறவிகள் தங்கும் அறை, சமையல் கூடம் ஆகியனவும் சேர்த்தே அமைக்கப்பட்டுள்ளன. புத்தர் மற்றும் போதி சத்துவர் உருவங்கள் இந்த குகைகளில் செதுக்கப்பட்டுள்ளன. சமணக் குகைகளில் கோட்டா கைலாஷ், ஜகன்னாத சபா ஆகியன குறிப்பிடத்தக்கவை.



## ஆக்ரா கோட்டை

தாஜ்மகாலில் இருந்து 2.5 கி.மீ தூரத்தில் உள்ளது ஆக்ரா கோட்டை. ராஜபுத்திரர்களால் உருவாக்கப்பட்ட இந்தக் கோட்டை பின்னர் சிக்கந்தர் லோடி காலத்தில் அவரது வசமானது. பின்னர் அவரது மகன் இப்ரகிம் லோடி அவர்களுக்குப் பிறகு பாபர், ஹுமாயுன், அக்பர், ஜஹாங்கிர், ஷாஜஹான், அவுரங்கசீப் ஆகியோர் இந்தக் கோட்டையில் வசித்திருக்கின்றனர். செங்கற்களால் கட்டப்பட்ட இந்தக் கோட்டை பின்னர் சிவப்பு வண்ணக் கற்களால் வலுப்படுத்தப்பட்டது. கோட்டையைச் சுற்றிலும் அகழிகள், அதனைத்தாண்டி உள்ளே வர சிறு சிறு பாலங்கள், 70 அடி வரை உயரமுடைய மதில்கள் என மிகச்சரியாக திட்டமிடப்பட்டு மிகுந்த பாதுகாப்புடன் கட்டப்பட்டது. கோட்டையினுள் அங்கூரி பாக் என்னும் பூங்கா, வரவேற்பு மண்டபங்கள், சலவைக்கல்லால் ஆன மசூதிகள், கண்ணாடி மாளிகைகள் இருந்திக்கின்றன.

ஹில்மேனின் பட்டியலில் இடம் பெறாத அதே நேரம் பல்வேறு புகழ் பெற்ற ஊடகங்கள், பயணிகள் வெளியிட்ட பட்டியலில் இடம்பெற்ற முக்கிய இந்திய அதிசயங்கள் கோனார்க் ஆலயம், ஜெய்சல்மார் கோட்டை மற்றும் கஜுரோஹா சிற்பங்கள் ஆகியன.

## கோனார்க் ஆலயம்

13 ஆம் நூற்றாண்டில் கோனார்க் சூரியக் கடவுள் ஆலயம் ஒரிசாவில் உள்ளது. கிழக்கு கங்கை சாம்ராஜ்யத்தின் அரசன் நரசிம்ம தேவன் காலத்தில் (தோராயமாக 1250 ஆம் வருடம்) கட்டப்பட்டது. மிகப்பெரிய தேர் வடிவத்தில் நுட்பமாக செதுக்கப்பட்ட கற்சக்கரங்கள், தூண்கள், கற்சுவர்கள் ஆகியன பிரமிக்க வைப்பவை.

(தொடரும்...)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2626

### கண்ணன்

நீ தீச்சட்டி எடுத்து
வேண்டினாலும் சாமி சோறு போடாது



விவசாயி மண்வெட்டி எடுத்தால் மட்டுமே
உன் பசியை போக்க முடியும்

### பௌசியா

ஏதற்கும் தயாராக இருக்க
வேண்டும்
ஒருநாள் நமக்கான வாய்ப்பு வரும்
-ஆபிரகாம் லிங்கன்-



### ஜெய்பிரவீன்

உன் தகுதியை
உயர்த்திக் கொண்டே
இரு உன்னை விட்டு எவர்
விலகினாலும் அது அவர்களுக்கே
பலவீனமாகவும், இழப்பாகவும்
இருக்க வேண்டும்



### லக்ஷயா

நல்லாதான் பேசுவாங்க நல்லாதான் பழகுவாங்க
நாம் நல்லாத்தான் இருக்காங்க நினைச்சு மனதார
சிரிப்போம் இதெல்லாம் வெளியதான் நடக்கும்



ஆனால், மனசுல பார்த்தீங்க என்றால் யாருடைய
முன்னேற்றமும் யாருக்கும் பிடிக்கிறது இல்லை
எல்லாம் நடித்துக் கொண்டு இருக்காங்க

### சரவணன்

தெரியாது என்பதை தைரியமாக
ஒப்புக்கொள்ளுங்கள்



அதே நேரம் தெரியாததை தெரிந்து
கொள்ள முயற்சி செய்யுங்கள்..

### கார்த்திகா

நல்ல வேலை டீச்சர்
யானையோ புலியையோ
வரையச் சொல்லல...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'


# சுகமான விடியல்

292

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## குரங்கு அம்மை நோய் (monkey pox) அபாயகரமானதா?

நாம் அண்மையில் பத்திரிகைகள் மூலமாகவும் செய்திகள் மூலமாகவும் குரங்கு அம்மைநோய் **(monkey pox)** மேற்கத்தேய நாடுகளில் பரவிவருகின்றது என்பதை அறிந்திருப்போம். இது மக்கள் மத்தியில் ஒரு அச்ச உணர்வை தோற்றுவித்துள்ளது. நாம் அண்மையில் தான் Covid 19 (கொரோனா) பெருந்தொற்றை எதிர்கொண்டு பல இழப்புக்களைச் சந்தித்தோம். இதிலிருந்து முற்றாக மீள்வதற்குள் மற்றொரு கிருமி பரவல் என்பது ஒரு அதிர்ச்சியான தகவலாகும்.



குரங்கு அம்மை நோய் **(monkey pox)** அண்மையில் அதாவது **may** 2022 இல் உலகில் பல பாகங்களில் ஒரே நேரத்தில் பரவியுள்ளது. குறிப்பாக அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா போன்ற 12 இற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து கிடைத்த அறிக்கைகளிலிருந்து அந்நாடுகளில் இந்நோய் சடுதியாகப் பரவியுள்ளது. சுமார் 100 பேர் வரை இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள்.

நான் இந்தக் கட்டுரையில் குரங்கு அம்மை நோய் என்றால் என்ன? அது எதனால் ஏற்படுகின்றது? எவ்வாறு பரவுகின்றது? அந்நோயின் அறிகுறிகள் என்ன? எவ்வாறு இதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்? போன்ற விபரங்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

குரங்கு அம்மைநோய் **(monkey pox)** ஆனது **poxviridae** குடும்பத்தைச் சேர்ந்த ஒரு **DNA virus** இனால் ஏற்படுகின்றது. இது குரங்குகள், எலிகள், அணில்கள் போன்ற விலங்குகளில் இருந்தே பொதுவாகப் பரவுகின்றது.

இவ் விலங்குகள் மனிதரை கடிக்கும் போது அல்லது விலங்குகளின் சுரப்புக்கள் மனிதரில் படும் போது அல்லது நன்கு வேக வைக்காமல் இறைச்சிகளை உண்ணும் போது மனிதர்களுக்கு தொற்றி விடுகிறது. விலங்குகளில் இருந்து மனிதர்களுக்குப் பரவுவதனால் இதை **Zoonotic disease** என அழைப்பார்கள் உலகில் முதன் முதலில் **monkey pox** 1958 ஆம் ஆண்டு குரங்குகளில் அவதானிக்கப்பட்டது. அதன் பின் இந்நோய் முதன் முதலில் மனிதரில் 1970 ஆம் ஆண்டு கொங்கோ நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

குரங்கு அம்மை நோயானது மேற்கு ஆபிரிக்க நாடுகளிலும் மத்திய ஆபிரிக்க நாடுகளிலும் பரவலாகக் காணப்படுகின்றது. **(ENDEMIC)** கடந்த 50 ஆண்டுகளாக இந்த ஆபிரிக்க நாடுகளில் காணப்படும் நோயானது மற்ற நாடுகளில் இதுவரை அவதானிக்கப்படவில்லை.

இம் மாதம் **May** 2022 இல் சடுதியாக மேற்கத்தேய நாடுகளில் ஏற்பட்ட பரம்பல் **(EPIDEMIC)** ஏன் ஏற்பட்டது என்பது புரியாத புதிராக உள்ளது. இதில் பாதிக்கப்பட்டவர்கள். ஒருபோதும் ஆபிரிக்க நாடுகளுக்குச் செல்லாதவர்கள். இதில் ஒரு விடயம் என்னவென்றால் பாதிக்கப்பட்ட அனைவரும் ஆண்கள். அது மட்டுமில்லாமல் அவர்கள் ஆண்களுடன் உடல் உறவு கொள்பவர்கள் (Homosexuals)

இனி குரங்கு அம்மை நோய் எவ்வாறு மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்குத் தொற்றுகின்றது. எனப் பார்ப்போமாக இருந்தால் பிரதானமாக நேரடி உடற்தொடுகையினால் தொற்றுகின்றது. **(Close contact)** நோயாளி பாவித்த படுக்கை விரிப்புக்கள், தலையணைகள், உடைகள் மூலமும் தொற்றிக் கொள்ளச் சந்தர்ப்பம் உள்ளது.

இதை விட நோயாளி தும்மும் போதும் இருமும் போதும் சுவாசச் சிறுதுளிகள் மூலமும் சுவாசப் பாதைகளூடாகப் பரவமுடியும்.

இந்நோயின் நோயரும்புக் காலம் 1-3 வாரங்களாகும். இனி நோயின் அறிகுறிகளைப் பார்ப்போமாயின், ஆரம்ப அறிகுறிகளாக காய்ச்சல், உடல்நோ, கடுமையான தலைவலி, நாரிநோ, நிணநீர்க்கணுக்களில் வீக்கம் போன்றவை ஏற்படுகின்றன.

காய்ச்சல் ஏற்பட்டு 1-3 நாட்களில் கொப்புளங்கள் ஏற்படுகின்றன. இவை முதலில் முகத்திலும் பின் உடலிலும் பின் அவயங்களிலும் ஏற்படுகின்றன.

முகத்திலும் கைகால்களிலுமே அதிகளவு கொப்புளங்கள் ஏற்படுகின்றன. கொப்புளங்கள் உடைந்து புண்ணாகி காய்ந்து அயறு ஏற்படுகின்றன. இதன்பின் காலம் மாறிய பின் சில வேளைகளில் மாறாத்த மும்புகள்,வடுக்கள் நிரந்தரமாக ஏற்படலாம்.

குரங்கு அம்மை நோய் ஒரு தானாகவே குணமடையக்கூடிய் நோயாகும். குணமடைய 2-4 கிழமைகள் எடுக்கின்றன. இது மரண வீதம் குறைவான நோயாகும். ஆனால் சிறு பிள்ளைகளிலும் கர்ப்பிணித்தாய்மார்களிலும் நிர்ப்பீடணத் தொகுதி பாதிப்படைந்தவர்களிலும் இது அதிக பாதிப்பை ஏற்படுத்தி மரணத்தை ஏற்படுத்தலாம் ஆபிரிக்க நாடுகளில் மரண வீதம் 3-6% ஆகும்.

ஆனால் மேற்கத்தேய நாடுகளில் தற்போது ஏற்பட்ட தொற்றின் போது ஒரு மரணம் கூட ஏற்படவில்லை என்பது ஒரு மகிழ்ச்சிகரமான விடயமாகும்.

அண்மையில் உலக சுகாதார ஸ்தாபனம் குரங்கு அம்மை நோய் சம்பந்தமாக மாநாடு ஒன்றை நடத்தியிருந்தது. ஆனாலும் **COVID 19** ஐ போல் உலக அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்த வில்லை. இதற்குக் காரணம் உண் மையில் **COVID 19** ஐ போல அபாயகரமான உலகப் பெருந் தொற்றை இது ஏற்படுத்தாது என்ப தாலாகும்.

இது உலகின் குறிப்பிட்ட மக்களை மட்டும் தாக்கப்போகிறது. இது தான் முன் குறிப்பிட்டது போல் **Homosexuals** ஐ தாக்குகின்றது. ஆனால் இது ஒரு பாலியல் சம்பந்தமான நோயில்லை. நெருக்கமான உடற்தொடர்புகள்தான் பரம்பலுக் குக் காரணமாகும். இனி எமக்கு சாதாரணமாக ஏற்படும் கொப்புளிப்பான் **(Chicken pox)** ஐ இதிலிருந்து வேறுபடுத்தியறிவது கடினமாகும். ஆனால் **Monkey pox** இல் கடும் தலைவலி, காய்ச்சல், தசைநோ, நாரிநோ என்பன ஏற்படும். இதில் ஏற்படும் கொப்புளங்கள் பெரியவை அத்துடன் நிணநீர்க்கணுக்கள் **(Lymphnodes)** வீங்குகின்றன.

இனி இந்த நோயிலிருந்து எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளலாம். எனப்பார்ப்போமாக இருந்தால், நோயாளியை அடையாளப்படுத்தி தனிமைப்படுத்த வேண்டும். அவர் பயன்படுத்திய பொருட்களைப் பயன்படுத்தக்கூடாது.

நோய் கண்டு பிடிக்கப்படுமிடத்து அது பற்றி அப்பகுதி **medical officer of health** இற்கு உடனடியாக அறிவிக்கப்படவேண்டும். (notification) நோயாளியை பராமரிப்பவர்கள் முகக்கவசம் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை அணிந்து கொண்டு **Personal Protective Equipment (PPE)** நோயாளியைப் பராமரிக்க வேண்டும்.

உங்களுக்குத் தெரிந்திருக்கலாம் 1980 வரை பெரியம்மை நோய் Smallpox இற்கான நோய்த் தடுப்பு ஊசி வழங்கப்பட்டு வந்தது. 1980 , y ; **Smallpox** உலகிலிருந்து முற்றாக அகற்றப்பட்டவுடன் **vaccine** நிறுத்தப்பட்டது. இந்த **vaccine** பெற்றவர்களுக்கு 85 வீதம் பாதுகாப்பு **Monkey pox** இற்கு ஏற்படுகின்றது. அது மட்டுமில்லாது இப்போது **Monkey pox** இற்கும் **vaccine** உள்ளது. அத்துடன் **monkey pox** இற்குரிய மருத்துகள் உள்ளன.

முடிவாக குரங்கு அம்மை நோய் பற்றி நீங்கள் அதிகம் பயப்படத்தேவையில்லை இதைப் பற்றி அறிந்திருப்பதுடன் அவதானமாக இருந்தால் போதுமானது.

Dr.S.**கேதீஸ்வரன்**
MBBS. MD,FCCP FACP,FDM
**பொது வைத்திய நிபுணர்**
**யாழ்.போதனா மருத்துவமனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்ல முயன்ற 45 பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்ல முயன்ற 45 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தென்னிலங்கையின் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் 26 நபர்களுடன் ஆழ்கடல் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த றோலர் படகொன்றை கடற்படையின் ரோந்துப் படகு மடக்கிப்பிடித்துள்ளது.

அதே போன்று கடற்படையின் மற்றொரு ரோந்துப் படகான P-481 மேற்குக் கடலில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது மோசமான நிலையில் இருந்த றோலர் படகொன்றில் பயணித்துக் கொண்டிருந்த 19 நபர்களையும் கைது செய்துள்ளது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (நி-6)


## வாடகைக்கு/ குத்தகைக்கு

கல்வியங்காட்டில் இயங்கும் சகல வசதிகளுடன் கூடிய திருமண மண்டபம் வாடகைக்கு/ குத்தகைக்கு வழங்கப்படும்.

(1651)

தொடர்பு
077 536 0763

## குருக்கள் / அர்ச்சகர்கள் தேவை

கிளிநொச்சி மாவட்டம், இயக்கச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ மகா காளி அம்மன் திருக்கோவிலுக்கு குருக்கள் மற்றும் அர்ச்சகர் தேவை.

### குருக்கள்

ஆகம முறைப்படியான நித்திய மற்றும் வருட பூஜை அனுஷ்டானங்களை செவ்வனே காலம் நேரம் தவறாமல் செய்வதற்கு அனுபவம் மிக்க ஸ்தானிக குருக்களாக இருக்க வேண்டும்.

முக்கால பூஜைகளை வேத ஆகம முறைப்படி நிறைவேற்றுவதோடு ஆலய நடைமுறைகளையும் பேணுவதும் அவசியமாகும்.

குருக்களுக்கு குடும்பத்துடன் தங்குவதற்கு ஆலய வளாகத்துக்குள் அமைந்துள்ள சிறந்த வாசஸ்தலம் வழங்கப்படும்.

### அர்ச்சகர்

ஆகம முறைப்படியான நித்திய பூஜை அனுஷ்டானங்களை செவ்வனே செய்யக்கூடிய அனுபவம் மிக்க அர்ச்சகராக இருக்க வேண்டும்.

முக்கால பூஜைகளை மிகவும் நேர்த்தியாகவும் காலம் நேரம் தவறாமல் தெய்வ பக்தி சிரத்தையுடன் செய்பவராக இருக்க வேண்டும்.

தேவையான மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்கும் விண்ணப்பங்களை அனுப்புவதற்கும் பின்வரும் தொடர்பாடல் முறைகளை பயன்படுத்தலாம்

ஈமெயில்- md@isfindustries.com
Fax - 011 537 8080
தொலைபேசி - 077 207 8451
விலாசம் - 3/4, Rockwood place, Colombo-07
ஸ்ரீ மகாகாளி அம்மன் தேவஸ்தானம் இயக்கச்சி அறங்காவலர் சபை
ஸ்ரீ மகா காளி அம்மன் தேவஸ்தானம்
இயக்கச்சி. (C-1721)

QUICK ADS

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 2<br>கி.பா: 13 சூரி 9 செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: சொந்ததொழில் / Dip.in Network, Bussiness Management<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி ஆசிரியை விரும்பத்தக்கது<br>தொ.இ: B/3402 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா: சூரி 4 செவ் 5 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்<br>தொ.இ:G/9991 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: 39 சூரி, செவ் 4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் விவாகரத்தானவர்<br>தொ.இ: B/10620 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திம்: அத்தம் 1<br>கி.பா: 43 சூரி 1 செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: G/10003 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: சூரி 11 செவ் 7<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில் BSc,(QS)Msc (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/9971 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: சூரி 1 செவ் 12 இல்<br>உயரம் : 5'<br>தகைமை/தொழில்: A/L அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: பிரான்ஸ் மட்டும்<br>தொ.இ:G/10017 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: சூரி, செவ் 10 இல்<br>தகைமை/தொழில்: BSc NGO<br>எதிர்பார்ப்பு :பட்டதாரி<br>தொ.இ: B/9972 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 10 சூரி 1 செவ் 11 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் அல்லது வெளிநாடு பதிவுத்திருமணத்துடன் விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ:G/10027 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் ____ ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

## பெண் உதவியாளர் தேவை

பிரபல தனியார் புடைவை நிறுவனம் ஒன்றுக்கு பெண் உதவியாளர் தேவை.
தகைமை :- A/L or O/L, ஆங்கில அறிவு.
வேலை முன்னனுபவம் விரும்பத்தக்கது.
வேலை நேரம் 10.00 a.m to 7.30p.m Monday-Saturday
(1633)
தொடர்புகளுக்கு Miss Rani
077 297 1363, 021 221 6488


## வட இலங்கை செய்தியாளர் பணி விபரக் கையேடு

மேற்படி கையேட்டை, பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் மற்றும் யாழ்.ஊடக அமையம் இணைந்து வெளியிடவுள்ளன.

இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் அச்சு, மின், இணையம் ஆகிய ஊடகங்களில் 1980 முதல் பணியாற்றிய, பணியாற்றுகின்ற செய்தியாளர்கள் உள்ளடக்கப்படுவர்.

படத்துடன் தகவல்களை தபால் மற்றும் மின்னஞ்சலில் 30 ஜூன் 2022 இற்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி

கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்,
பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்,
இல.891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C-4386)

மின்னஞ்சல் : rmpillai01@gmail.com


## பணிப்பெண் தேவை

பருத்தித்துறையில் அமைந்துள்ள வீடொன்றிற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை.
(1636)
தொடர்பு : 077 512 2931


## மணமகள் தேவை

1979 இல் பிறந்த அச்சுவினி நட்சத்திரம் B.Sc பட்டதாரியான லண்டனில் PR உள்ள சுய தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு : 077 110 7624
Viber : 078 303 5181 (1650)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோக சுவாமிகளின் 150 ஆவது ஜெனன தினம் இன்று

இப்புவியில் சமீபகால வரலாற்றில் எளிமையான முறையில் ஆனால் ஆழ்ந்த தெய்வீக ஊற்றாகத் திகழ்ந்த ஞானிகளில் சிவயோக சுவாமிகள் முதன்மையானவர் என்றால் மிகையாகாது. சிவ தொண்டும் சிவதியானமுமே அவரின் போதனைகளின் சாராம்சம். அது தன்னைத்தானே விளங்கி, தன்னைத்தானே உணர்ந்து சிவ தொண்டையும் சிவ தியாகத்தையும் மறவாது சிவசிந்தனையுடன் மனிதாபிமானமாக ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாக அமைகின்றது.



இலங்கையில் மாவிட்டபுரம் கிராமத்தில் 1872 ஆம் ஆண்டில் சிவயோக சுவாமிகள் பிறந்தார். நல்லூர் திருத்தலத்தில் தனது குருவான செல்லப்பா சுவாமிகளைத் தன் முப்பத்தைந்தாவது வயதில் சந்தித்தார். அந்த முதற் சந்திப்பே லௌகீக வாழ்வில் உலக ஆர்வமெல்லாம் துறந்து ஆன்மிக வாழ்வில் சுவாமிகளை ஈடுபட வைத்தது. தனது குருவின் வழிகாட்டலில் மிகவும் கடுமையான ஆன்மிக கட்டுப்பாடுகளுக்குள் தன்னை ஆழ்த்திக் கொண்டார். செல்லப்பா சுவாமிகள் 1915 இல் மகாசமாதி அடைந்தார். யோக சுவாமிகள் கொழும்புத்துறையில் ஒரு சிறு குடிசையில் தனது வதிவிடத்தை அமைத்துக் கொண்டார். அங்கு அடிக்கடி தியானத்தில் ஈடுபடுவார்.

ஆன்மிகப் பிரார்த்தனையில் மூழ்கி உலக வாழ்வை மறந்து வெள்ளை உடையணிந்து எளிமையாக வாழ்ந்தார். விவசாயிகள் முதல் இராஜதந்திரிகள் வரை சுவாமிகளது இறைவனுடனான சரணாகதி உறவை அறிந்து சுவாமிகளின் குடிசையைத் தேடி வந்து சுவாமிகளின் திருவடியில் ஆசி கோரி நின்றனர். அவரது உள்ளார்ந்த ஆன்மிக வழிபாட்டை 'சிவ தொண்டு சிவ தியானம்' என்ற இரு சொற்களில் எடுத்துரைக்க லாம். மேலும் இதயத்தை உருக்கும் அன்புச் சொற்களாலோ அம்பு போல் சுடும் கடின வார்த்தைகளாலோ அவரின் அருள் மிகு பணிப்புகளாகவே மதிக்கப்பட்ட வார்த்தைகளில் வரும் சூட்சும சக்தியை இந்துக்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், முஸ்லிம்கள், ஏன் நாஸ்திகர்கள் கூட நாடி நின்றனர். தமிழர்கள், அமெரிக்கர்கள், கனேடியர் மற்றும் ஐரோப்பியர், அவுஸ்திரேலிய மக்கள் என எத்தனையோ பேரின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியைச் சிறப்புற வைத்தது சிவயோக சுவாமியாரின் வாழ்வு.

எனது குருவான அமெரிக்கா ஹவாய் ஆதீனத்தின் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளும் அவரின் சீடர்களில் ஒருவர். வட அமெரிக்காவில் முதலாவது இந்து ஆலயத்தை குருதேவர் நிறுவியதுடன் ஓர் ஆதீனத்தையும் ஹவாயில் அமைத்து, மேற்கு உலகில் முதலில் சைவ சமயத்தை பரப்பினார். எனது குருநாதரை அப்பணியில் தூண்டிவிட்ட பெருமை யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிக்கே உரியது.

இன்று சிவயோக சுவாமிகள் பிறந்து நூற்று ஐம்பது வருடங்கள் நிறைவு பெறுகின்றன. இத்தினம் ஈழத்து சைவ சமய வரலாற்றில் ஒரு பொன்னான திருநாளாகும். யாழ்ப்பாணத்தில் அறுபது வருடங்களுக்கு மேலாக தனிப் பெரும் தவஞானியாக கொழும்புத் துறையில் சிறுகுடிசையில் வாழ்ந்து 1964 ஆம் ஆண்டு பங்குனி மாத ஆயிலிய நட்சத்திரத்தில் மகா சமாதியடைந்த சிவயோக சுவாமிகளின் வாழ்வும் போதனைகளும் அவரை உலகளாவிய பல இன மொழி பேசும் அடியவர்களாலும் போற்றிப் பேணப்படுகின்றது.

இவ்வருடம் சுவாமிகளின் கொழும்புத்துறையில் அமைந்த சமாதிக் கோவிலில் சுவாமிகளின் 150 ஆவது ஜெனன தினம் பக்திபூர்வமாக கொண்டாடப்படுகின்றது. இதில் ஒரு சிறப்பு அம்சமாக சுவாமிகளின் அணுக்கத் தொண்டர் ஒருவர் சுவாமிகளது வாழ்வு பற்றியும் சுவாமிகளுடன் தனது நேரடி அனுபவங்கள் பற்றியும் எழுதிய நூல் ஒன்று வெளியிடப்படுகின்றது. சுவாமிகள் அகவுலகில் இருந்து தனது அடியவர்களை நெறிப்படுத்தி வருகின்றார். சுவாமிகளின் சீடர்கள் மூலமாக ஈழத்துச் சித்தர் பாரம்பரியம் இன்றும் இப்புவியில் நிலைத்திருக்கின்றது. யோக குருநாதன் திருவடிகள் போற்றி!

**ரிஷி தொண்டுநாதன்.**



# 240 லீற்றர் பெற்றோலுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவலை அடுத்து 240 லீற்றர் பெற்றோலுடன் 50 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை மாவட்டம், மடுல்சீமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிட்டமாறுவை பகுதியில் வியாபார நிலையத்தில் அதிக விலைக்குப் பெற்றோல் விற்பனை செய்யப்படுகின்றது எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, கொள்கலன்களில் இருந்து மொத்தமாக 240 லீற்றர் பெற்றோல் மீட்கப்பட்டுள்ளது. கைதானவர், பிட்ட மாறுவ பகுதியைச் சேர்ந்தவராவார். குறித்த சந்தேகநபர் பதுளை நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (நி-5)

# சர்வதேசத்திடமிருந்து நிதியுதவி கிடைக்கும் வரை பணத்தை அச்சிட வேண்டாம்- ஐ.ம.ச.கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் தற்போதுள்ள பணவீக்கத்திற்கு மத்தியில் மீண்டும் மீண்டும் பணத்தை அச்சிடுவதால் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு, தள்ளுவண்டியில் பணத்தை கொண்டு செல்ல வேண்டிய நிலைமையே ஏற்படும்.

பாணின் விலை 400 ரூபாய் வரை உயர்வடையும். எனவே பணத்தை அச்சிடுவதற்கு பதிலாக தனியார் நிறுவனங்கள் அரச வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய கடனை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

நாட்டை நிர்வகிப்பதற்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காகவும் மேலும் 1 டிரில்லியன் பணம் அச்சிடப்படவுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இவ்வாறு பணத்தை அச்சிட வேண்டாம் என்று பிரதமரிடம் கோருகின்றோம்.

இந்த தொகை பணம் அச்சிடப்பட்டால் பாணின் விலை 400 ரூபாய் வரையும் பால்மா பக்கற்றின் விலை 1000 ரூபாய் வரையும், பெற்றோல் லீற்றரொன்றின் விலை 600 ரூபாய் வரையும், சமையல் எரிவாயு சிலிண்டரொன்றின் விலை 10,000 ரூபாய் வரையும் உயர்வடையக் கூடும்.

இவ்வாறான நிலைமை ஏற்பட்டால் சிறு தொழில்களில் ஈடுபடுவோருக்கும் அன்றாடம் உழைத்து உண்போருக்கும் வாழ முடியாத சூழல் ஏற்படும்.

சர்வதேசத்திடமிருந்து நிதியுதவிகள் கிடைக்கப் பெறும் வரை இவ்வாறு பணத்தை அச்சிட்டு பணவீக்கத்தை அதிகரிக்காமல், மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கிக்கு கடன் செலுத்த வேண்டியுள்ள தனியார் நிறுவனங்களிடமிருந்து பணத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகின்றோம்.

மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பவற்றுக்கு சில தனியார் நிறுவனங்களினால் சுமார் 9000 மில்லியன் ரூபாய் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

அந்த நிறுவனங்களிடமிருந்து குறித்த பணத்தொகையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறில்லை எனில் அத்தியாவசியப் பொருட்களுக்கான வரிசைகள் மேலும் அதிகரிக்கும்.

பணம் இருந்தாலும் பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத நிலைமை ஏற்படும். பொருட்களின் விலைகள் வானளவு உயர்வடையும். பணவீக்கத்தை அதிகரித்து பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக தள்ளுவண்டியில் பணத்தைக் கொண்டு செல்ல வேண்டிய நிலைமையை ஏற்படுத்தி விட வேண்டாம் என்று பிரதமரிடம் கேட்டுக்கொள்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 300 | 400 |
| உருளைக்கிழங்கு | 240 | 230 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 330 | 450 |
| தக்காளி | 800 | 750 | 600 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 130 | 120 |
| கோவா | 250 | 250 | 220 | 300 |
| கரட் | 200 | 350 | 330 | 400 |
| பூசணி | 120 | 120 | 100 | 120 |
| புடோல் | 250 | 250 | 220 | 300 |
| வாழைக்காய் | 50 | 500 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 150-400 | 500 |
| பெரிய வெங்காயம் | 240 | 230 | 200 | 240 |
| பாகற்காய் | 650 | 700 | 800 | 600 |
| வெண்டக்காய் | 200 | 180 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 220 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 240 | 200 |
| லீக்ஸ் | 220 | 260 | 230 | 320 |
| பீற்றூட் | 380 | 400 | -- | 400 |
| கறிமிளகாய் | 500 | 600 | -- | 600 |
| முருங்கைக்காய் | 1400 | 1800 | 1400 | 1200 |
| போஞ்சி | 600 | 700 | -- | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 150 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 100 | 100 |
| தேசிக்காய் | 600 | 500 | 450 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 40-60 | 60-80 |
| இராசவள்ளி | 180 | 250 | 200 | 160 |
| வெங்காயப்பூ | -- | 600 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 160 | -- | 280 |
| பொன்னாங்கண்ணி | 60 | 70 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | 200 | -- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் வாழ்வதோடு பிறர் வாழவும் வழிவகை செய்யுங்கள்.

*– சர் ரோஸர்லெஸ்ட் ரேஞ்ச்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இனப்பிரச்சினையைத் தீர்த்து புலம்பெயர் தமிழரின் உதவியைப் பெறுக!

கடல்நீர் ஏரியில் இரண்டு கப்பல்கள் எட்டிய தூரத்தில் தரித்து நிற்கின்றன.

ஒரு கப்பலில் இருந்து மற்றைய கப்பலுக்குத் தகவல் வருகிறது.

எங்களிடம் இருந்த குடிநீர் தீர்ந்துவிட்டது. தயவுசெய்து குடிநீர் தந்துதவுங்கள். இதுவே அந்தத் தகவல்.

இத்தகவல் கிடைத்த மாத்திரத்தில் குறித்த கப்பலில் இருந்து அந்தக் கப்பலுக்குத் தகவல் அனுப்பப்படுகிறது.

நண்பர்களே! நீங்கள் தரித்து நிற்கின்ற இடத்துத் தண்ணீர் நன்னீர்.

அதனை எடுத்துப் பருகிக் கொள்ளுங்கள் என்பதாக அந்தத் தகவல் அமைந்திருக்கிறது.

ஆம், இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காக ஆட்சியாளர்களும் மத்திய வங்கி அதிகாரிகளும் உலக நாடுகளிடமும் சர்வதேச அமைப்புகளிடமும் நிதி உதவி செய்யுமாறு கெஞ்சி மன்றாடி இரந்து கேட்கின்றனர்.

எனினும் அந்த நாடுகளும் அமைப்புகளும் கைவிரித்து விடுகின்றன.

இந்த நிலையில்தான் இந்த நாட்டின் ஆட்சியாளர்களுக்கு நாம் அனுப்பக்கூடிய தகவல் ஒன்று உள்ளது.

அதாவது எங்களுக்கு நிதி உதவி செய்யுங்கள் என்று நீங்கள் இரந்து கேட்கிறீர்கள். ஆனால் இந்த நாட்டைச் சேர்ந்த புலம்பெயர் தமிழ் மக்களிடம் இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கக்கூடியதான நிதிப்பலம் உண்டு.

எனவே நீங்கள் உலகமெல்லாம் கையேந்துவதை விடுத்து, இந்த நாட்டு மக்களிடம் உதவி கேட்பதில் எந்தத் தவறும் இல்லை.

ஆனாலும் மனக்கிலேசம் இருக்கலாம். பரவாயில்லை. அதற்கும் வழி உண்டு.

உடனடியாக இனப்பிரச்சினக்குத் தீர்வு காணுங்கள். வடக்கு கிழக்குத் தமிழர் தாயகத்தை இணைத்து சமஷ்டித் தீர்வை வழங்குங்கள். இதனை நீங்கள் எந்த நாட்டிடமும் கேட்காமல் உடனடியாகச் செய்ய முடியும்.

இதை நீங்கள் செய்வீர்களாயின் புலம்பெயர் தமிழ் மக்கள் இலங்கையின் வறுமையைப் போக்குவர். வீழ்ந்த பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவர்.

உண்மை. இனவாதம், மதவாதம் பேசி நாட்டைக் குட்டிச்சுவராக்கியாயிற்று. இனியும் அந்தத் தவறை இழைப்போமாயின், பட்டினிச் சாவு இலங்கையைப் பலியெடுக்கும்.

அதற்கான அத்தனை அறிகுறிகளும் தென்படத் தொடங்கிவிட்டன.

எனவே நாட்டின் வறுமையை ஒழித்து மீண்டும் அழகிய இலங்காபுரியை புனரமைக்க ஆட்சியாளர்களும் பெரும்பான்மை இனமாகிய சிங்கள மக்களும் தயாராக வேண்டும்.

நாங்கள் இருக்கின்ற இடத்து நீர் குடிநீர் என்பதை தெரிந்து கொள்ளாமல், எட்டிய இடமெல்லாம் குடிநீர் தாருங்கள் என்று கேட்கிறோம் என்றால் இதைவிட்ட அறியாமை வேறெதுவுமாக இருக்க முடியாது.

ஆகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வை அடைந்து அதனூடு புலம்பெயர் தமிழ் மக்களின் உதவியோடு நாட்டை கட்டியெழுப்புவதே ஒரேயொரு வழியாகும்.

# மத்திய வங்கி சுயாதீனமாக செயற்படுவதற்கு முழுமையான ஆதரவும் சுதந்திரமும் வழங்கப்படும்

## ஜனாதிபதி கோட்டாபய உறுதி

மத்திய வங்கியின் பங்களிப்பை சுயாதீனமாக முன்னெடுப்பதற்கு அரசாங்கம் முழுமையான ஆதரவையும் சுதந்திரத்தையும் வழங்கும் என அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ நேற்று உறுதியளித்துள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் நாணயச் சபை உறுப்பினர் சஞ்சீவ ஜயவர்தன ஆகியோருடன் நேற்று காலை கொழும்பு கோட்டையிலுள்ள அரச தலைவர் மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அரச தலைவர் இதனைத் தெரிவித்தார்.

குறுகிய காலத்திற்குள் நிதி நெருக்கடியைக் கட்டுப்படுத்தவும், அவற்றைத் தணிக்கவும் ஆளுநர் நந்தலால் வீரசிங்க மேற்கொண்ட நடவடிக்கைகளையும் அரச தலைவர் இந்த சந்திப்பின்போது பாராட்டினார்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களுடன் கலந்துரையாடி பொருளாதாரத் துறையில் நிபுணர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் வெற்றிகரமான முன்னேற்றம் கண்டுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

பணவீக்கத்தை கட்டுப்படுத்தவும், பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் எடுக்கப்பட்ட செயல் திட்டத்தையும் அவர் வலியுறுத்தினார்.

தற்போதைய செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதன் மூலம் தற்போதைய சமூக மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைய முடியும் என் மத்திய வங்கியின் ஆளுநர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை, எந்தவொரு அரசியல் தலையீடும் இன்றி இந்த செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் உதவுவதாக அரச தலைவர் தெரிவித்தார். (ம-7)

# நாட்டில் இன்று மின்வெட்டு இல்லை

நாட்டில் இன்று மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜானக்க ரத்நாயக்க குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

விடுமுறை நாள் என்பதால் அரச திணைக்களங்கள் உட்பட்ட அலுவலகங்களின் செயற்பாடு இடம்பெறாது என்பதால் மின் பாவனை குறைவாக காணப்படும் என்பதால் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ம-7)

## வவுனியா நகரில்

# தலை சிதறிய நிலையில் இந்தியரின் சடலம் மீட்பு

வவுனியா நகரில் பஜார் வீதியிலுள்ள வர்த்தக நிலையத்திற்கு முன்பாக தலை சிதறிய நிலையில் இந்தியர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

36 வயதுடைய சன்டிப் மலிக் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வவுனியா பஜார் வீதியிலுள்ள வர்த்தக நிலையத்தின் முன்பகுதியில் தலை சிதறிய நிலையில் இரத்தம் ஓடியபடி ஒருவர் காணப்பட்ட நிலையில், அதனை அவதானித்த சிலர் அவரை மீட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதித்தனர். எனினும் அவர் முன்பதாகவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்த நிலையில் குறித்த நபர் வர்த்தக நிலையம் ஒன்றின் மேற்பகுதியில் விடுதி அமைந்துள்ள மூன்றாம் மாடி கட்டிடத்திலிருந்து கீழே வீழ்ந்து மரணித்துள்ளார் என விசாரணைகளின் ஆரம்ப கட்டத்தில் தெரியவந்துள்ளதுடன் குறித்த நபரின் மரணம் கொலையா? அல்லது தற்கொலையா? என்ற கோணத்தில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

# நெல்லியடியில் வீடு உடைத்து நகை, அலைபேசி திருட்டு

## பெண் உட்பட இருவர் கைது

நெல்லியடியில் வீடொன்றை உடைத்து நகைகள் மற்றும் அலைபேசி உள்ளிட்ட பெறுமதியான பொருட்களைத் திருடிய குற்றச்சாட்டில் பெண் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் நெல்லியடி நகரப் பகுதியில் உள்ள வீடொன்றை பட்டப்பகலில் உடைத்து நகைகள் மற்றும் அலைபேசி உள்ளிட்ட பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போயிருந்தன .

சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் காங்கேசன் துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான மாவட்டக் குற்றத் தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.


இந்த நிலையில் 28 வயதுடைய ஆண் ஒருவரும் 20 வயதுடைய பெண் ஒருவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர் .

சந்தேக நபர்களிடமிருந்து ஐ போன் ஒன்றும் ஐ பாட் ஒன்றும் 6 கிராம் எடையுடைய தோடுகளும் மற்றும் 35 ஆயிரம் ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்கள் இருவரும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர். (ம-7,33)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

## உயர்வு கிடைக்காமல் போவதற்கு என்ன காரணம்?



இறைவனின் கட்டளைப்படி யோசேப்பு நடந்து கொண்டதால் அவனுடன் இறைவன் தொடர்ந்து பக்கபலமாக இருந்தார். (ஆதி.39:21,23). அப்படி இல்லாமல் அழுது, ஆர்ப்பாட்டம் செய்து யோசேப்பு முரண்டுபிடித்து வேறு வழியைக் கையாண்டு, தன்னை நிரபராதி என்று நிரூபித்து சிறையிலிருந்து வெளியே வந்திருந்தால், ஒரு தேசத்தின் அதிபதி என்ற உன்னத நிலையை அவனால் அடைந்திருக்க முடியாது.

பல ஆண்டுகளாக சிறையிலிருந்த யோசேப்பு கூட ஒரு கட்டத்தில் தனது விடுதலைக்காக மனிதனை நாடியுள்ளான். (ஆதி. 40:14). இறைவனின் தயவு அவனுக்கு தொடர்ந்து கிடைப்பது தெரிந்திருந்தாலும் மனிதனின் தயவையே யோசேப்பு ஒரு கட்டத்தில் நாடியுள்ளான். ஆனாலும் அந்த மனிதனின் (பானபாத்திரகாரரின் தலைவன்) மனதில் யோசேப்பை பற்றிய நினைவை இறைவன் அப்போது அனுமதிக்கவில்லை (ஆதி: 40:23).

ஒருவேளை அவன் முயற்சிசெய்து யோசோப்புக்கு விடுதலை பெற்றுத்தந்திருக்க முடியும். அதன் பின்னர் எந்த பிடிப்பும் இல்லாமல் யோசேப்பு அந்த நாட்டை விட்டு தனது தகப்பனை தேடி ஊருக்கு ஓடிச் சென்று இருப்பான். அது நடக்கவில்லை அந்த நாட்டு மன்னன் பார்வோனுக்கு கனவுகள் வரும் வரையில் யோசேப்பு சிறையில் இருக்க வேண்டும் என்பது இறைவனின் விருப்பம் அது முழுமையாக நிறைவேறியது. அதன் பின்னரே பானபாத்திரக்காரரின் தலைவனின் மனதில் யோசேப்பு பற்றிய நினைவையும் தயவையும் இறைவன் கட்டளையிட்டார். (ஆதி.41:9).

கணவன்-மனைவி, மாமியார்-மருமகள், அலுவலகங்கள், வாழ்விடங்கள் ஆகியவற்றில் பலர் தினமும் சிறை போன்ற வாழ்க்கையை அனுபவிக்கக்கூடும். இறைவன் இயேசுவின் வழியில் நடந்து பொறுமையோடு இருங்கள். மனித முயற்சிகளை கைவிடுங்கள். உங்களுக்கு வேண்டிய மனித தயவை உரிய காலத்தில் இறைவன் கட்டளையிடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விநியோகம் இல்லை
# அழிவடையும் நிலையில் பயிர்கள்
## விவசாயிகள் கவலை

(தருமபுரம்)

**ஒரு மாத காலமாக எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு மண்ணெண்ணெய் விநியோகம் இல்லாத காரணத்தினால் மேட்டுநில பயிர்களுக்கு நீர் பாய்ச்ச முடியாது அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக விசுவமடு விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**



அவர்கள் மேலும் தெரிவிக்கையில் வாழ்வாதாரத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கத்தரி, வெண்டி, பூசனி போன்ற பலவகை பயிர்கள் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படாத காரணத்தினால் பயன் தரக் கூடிய நிலையில் அழிவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் எமது வாழ்வாதாரம் மிக அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது நாட்டில் இரசாயன உரத்தினை அதிக விலைக்கு பெற்றும் மற்றும் கிருமி நாசினி பெற முடியாத காரணத்தினாலும் பயிர்ச்செய்கை அழிவடைந்து வருகின்றது.

இதன் காரணமாக சந்தையில் காய்கறிகளின் விலை சடுதியாக அதிகரித்து காணப்படுகிறது.

எனவே விவசாயிகளின் நலன் கருதி எமக்கு மண்ணெண்ணெய் வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து வாழ்வாதாரத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (4-6-316)

---



யாழ்ப்பாண மாவட்டத்தில் பொது மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் ஆரா்யும் விசேட கூட்டம் யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பங்கேற்பில் இடம் பெற்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் பொது மக்கள் எதிர்நோக்கும் அத்தியாவசியப் பொருட்கள், எரிபொருள் மற்றும் எரிவாயு விநியோகம் மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் நேற்று ஆராயப்பட்டதுடன் அதற்குரிய தீர்வும் எட்டப்பட்டது. (படம் : சிவசாந்தன்)

---

# கஞ்சா கடத்தி சென்ற கணவன் மனைவி கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட முத்தையன் கட்டு பகுதியில் கஞ்சா கடத்தி சென்ற கணவன் மனைவி இருவரையும் ஒட்டுசுட்டான் பொலிஸார் நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் தொட்டியடிப் பகுதியில் வீதிசோதனை நடவடிக்கையினை மேற்கொண்ட பொலிஸார் உந்துருளியில் சந்தேகமான முறையில் சென்ற கணவன் மனைவி இருவரையும் சோதனை செய்தபோது ஒரு கிலோ 360 கிராம் கேரளக் கஞ்சாவினை கடத்தி செல்ல முற்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இதன்போது முத்தையன் கட்டைச் சேர்ந்த 40 வயதுடைய குடும்பபெண்ணும் அவரது கணவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நீதிபதி வாசல் தலத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்ததாக ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்துள்ளனர் (4-6-281)

---




கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள IDEAL ACADAMY நிறுவனத்தின் SPOKEN ENGLISH கற்கை நெறியினை பூர்த்தி செய்த 38 ஆவது அணியினரின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

---

# எரிவாயு சிலிண்டர்களை பெற முண்டியடித்த மக்கள்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பிரதேசத்தில் நேற்று எரிவாயு சிலிண்டர் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலையில் எரிவாயு சிலிண்டர்களை பெற மக்கள் முண்டியடித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பிரதேசத்தில் எரிவாயு சிலிண்டர் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து ஒரு பொது விளையாட்டு மைதானத்தில் மக்கள் கூடினர். இவ்வாறு கூடியவர்களில் 450 பேருக்கு எரிவாயு சிலிண்டர்கள் வழங்கி வைக்கப்பட்டன. மேலும் பலர் அங்கு சென்று ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

அத்துடன் இந்த நடவடிக்கைக்காக பொலிஸார், இராணுவத்தினர்,விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (4-6-281)

---

# தமிழக உதவித் திட்டம்; முல்லைத்தீவில் ஆரம்பம்



(பனிக்கன்குளம்)

தமிழக நன்கொடை உதவித்திட்டத்தினை முல்லைத்தீவு மாவட்டத்தில் விநியோகிக்கும் பணி நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாவட்ட செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் யாழ். இந்திய துணைத்தூதுவர் ஜெ. ராகேஷ் நடராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு குறித்த உதவித்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.(4-6-281)

---

# இலவச கற்றல் நிலையம் வவுனியாவில் அங்குரார்ப்பணம்



(நெளுக்குளம்)

வவுனியா வடக்கு புளியங்குளம் முத்துமாரி நகர் கிராமத்தில் எழுகை சுவிஸ் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் ஊடாக புளியங்குளம் வடக்கு பிரதேச மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தும் நோக்குடன் முற்றுமுழுதான இலவசக் கற்றல் நிலையம் நேற்று உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வவுனியா வடக்கு பிரதேசத்தில் தரம் 05 முதல் உயர்தரம் வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கான முக்கிய பாடங்கள் தேர்ச்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களின் கற்பித்தலுடன் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. எழுகை அறிவாலயத்தின் மாணவர்கள் முற்றிலும் இலவசமாக தமது கற்றல் செயற்பாடுகளின் இணைந்து கொள்ளமுடியும். (4-6-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவாந்துறை...

தவராவார்.

இவருடன் பயணித்த மற்றுமொருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர். (ம-7,18,33)

## மின்சார...

தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அமைச்சர், மின்சார பாவனை தொடர்பில் அனைத்து தரப்பினரும் அக்கறையுடன் செயற்பட வேண்டுமெனவும், நிறுவன மற்றும் தனிஆள் மின்சார பாவனையை குறைக்குமாறும் கேட்டுக் கொண்டார். (ம-7)

## பிரதமர் ரணிலு...

விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

"பொருளாதார நெருக்கடியில் இருந்து என்னால் மாத்திரம் இலங்கையைக் காப்பாற்ற முடியாது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் திறன் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் உண்டு.

அதனால்தான் அவரைப் புதிய பிரதமராக நியமித்துள்ளதுடன் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுப் பொறுப்புக்களையும் அவரிடம் ஒப்படைத்துள்ளேன். அதேவேளை, திறமைமிக்கவர்களை அமைச்சரவைக்கு உள்வாங்கி வருகின்றேன். அடுத்த வாரத்துக்குள் அமைச்சரவை நியமனம் முழுமைபெறும்.

அமைச்சரவை நியமனம் முழுமை பெற்றவுடன் ஜனாதிபதி பதவியிலிருந்து நான் விலகுவேன் என்று சில ஊடகச் செய்திகளைப் பார்த்தேன். எனினும், நான் ஒருபோதும் பதவி விலகமாட்டேன்.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை ஓரணியில் செயற்பட்டால்தான் நாட்டுப் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வுகாண முடியும்.

இந்தப் புதிய அரசு சவால்களை எதிர்கொண்டு வெற்றிநடை போடும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.

எதிரணியினரை நான் பகைக்கவில்லை. அவர்களையும் அரவணைத்துக்கொண்டு நாட்டுக்காக நாம் அனைவரும் பணியாற்ற வேண்டும்" என ஜனாதிபதி மேலும் கூறினார். (ம-7)

## கொழும்பில்...

ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தை பதவிவிலகுமாறு வலியுறுத்தி கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மக்கள் தன்னெழுச்சிப் போராட்டம் நேற்று 50 ஆவது நாளாக இடம்பெற்று வரும் நிலையில் காலிமுகத்திடல் பகுதியில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது

இந்தப்போராட்டம் கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில் ஆரம்பித்து காலிமுகத்திடல் கோட்டா கோ கமவை வந்தடைந்தது.

இப்போராட்டத்தில் மதகுருமார்கள், தொழிற்சங்கத்தினர், கலைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது மக்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்டு அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

மேலும் ஜனாதிபதி கோட்டாபய மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பில் நேற்று பாரிய கறுப்பு உடைப் பேரணி இடம்பெற்றது. இதன் மீது பொலிஸார் கண்ணீர்புகை மற்றும் நீர் பீரங்கி மூலம் தாக்குதல் நடத்தினர்.

நேற்று பிற்பகல் 2 மணிக்கு கொள்ளுப்பிட்டி சந்தியில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணி, ஜனாதிபதி செயலகம் வரை நடைபெற்றது.

ஜனாதிபதி மாளிகையை நோக்கி ஆர்ப்பாட்டப் பேரணியை செல்ல விடாமல் தடுப்பதற்காக கொழும்பு லோட்டஸ் வீதியில் அதிக எண்ணிக்கையிலான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டப் பேரணி, கொழும்பு உலக வர்த்தக மையத்துக்கு அருகில் எதிர்ப்பில் ஈடுபட்டிருந்த நிலையில், பொலிஸார் கண்ணீர் புகை மற்றும் நீர் பீரங்கி மூலம் தாக்குதல் நடத்தினர். (ம-7)

## எரிபொருள்...

8 பரல்களில் மண்ணெண்ணெய், 2 பரல்களில் பெற்றோல் மற்றும் ஒரு பரல் டீசல் என்பனவே கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் மயிலங்காடு பகுதியில் உள்ள வீடொன்றோடு இணைந்த கடை ஒன்றிலிருந்தே நேற்று மாலை இவ்வாறு எரிபொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பெற்றோல் [illegible] விற்பனை செய்த போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

மண்ணெண்ணெய் சுமார் ஆயிரத்து 600 லீற்றர், பெற்றோல் சுமார் 400 லீற்றர், டீசல் சுமார் 200 லீற்றர் கைப்பற்றப் பட்டுள்ளன. (ம-7,18,33)

## இணைப் பேராசி...

யைச் சேர்ந்த இணைப் பேராசிரியர் பி. செவ்வேள் தாவரவியலில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்படுவதற்கு பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக் மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த இணைப் பேராசிரியர் பி. செவ்வேளின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் நேற்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் படி, தாவரவியற் துறையைச் சேர்ந்த இணைப் பேராசிரியர் பி. செவ்வேள் தாவரவியலில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (ம-7,18,33)

## முச்சக்கரவண்டி,...

டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதிகள் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக 95 ஒக்டேன் பெற்றோலை சேகரிப்பதனால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் 6,142 மெட்ரிக்தொன் 95 ஒக்டேன் பெற்றோல்மட்டுமே இருப்பதாக வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது டுவிட்டர் பதிவொன்றில் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வட்டு...

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்றது.

யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி தலைமையில் இடம்பெற்ற இவ் விசாரணையில் 75 வயதான விநாயகமூர்த்தி விஜயலக்சுமி உயிரிழந்து 1-4 நாட்கள் ஆகியிருக்கலாம் என்றும் உணவு இன்மையாலேயே அவர் உயிரிழந்துள்ளார் என்பதும் கண்டறியப்பட்டது.

மேலும் 77 வயதான திருநாவுக் [illegible] இதயக் கோளாறு மற்றும் உணவின்மையின் காரணமாக 15 நாட்களுக்கு முன்னதாகவே உயிரிழந்துள்ளமை உறுதியானது.

உடற்கூற்று பரிசோதனைகள் நிறைவடைந்த பின் சடலங்கள் பெறாமகன் முறை உறவினரிடம் கையளிக்கப்பட்டது. (ம-7)

## 9 வயது சிறுமி...

தற்காக சென்றுள்ளார்.

ஆனால் அவள் வீடு திரும்பவில்லை. கடைக்கு அருகில் இருந்த சிசிரிவி கமராவில் அவர் கடைக்கு வருவதும், மீண்டும் வெளியே செல்வதும் பதிவாகியிருந்தது.

சிறுமி காணாமல்போன சம்பவம் தொடர்பில் பண்டாரகம பொலிஸாருக்கு மேலதிகமாக பாணந்துறை பிரதேச குற்றத்தடுப்பு பிரிவினர் மற்றும் புலனாய்வு அதிகாரிகளும் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் குறித்த சிறுமியின் சடலம் அவரது வீட்டிற்கு அருகில் உள்ள சதுப்பு நிலப்பகுதியில் புதைந்திருந்த நிலையில் பிரதேசவாசிகளினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



ஜாதிக சம்பத
அச்சிடப்பட்ட திகதி 22.05.2022
சீட்டிழுப்பு திகதி 28.05.2022
சீட்டிழுப்பு இலக்கம் 1249
வெற்றி இலக்கங்கள்
கடகம் 5 5 4 5 3 0
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2022.05.28
சீட்டிழுப்பு இலக்கம் 3011
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 05 16 43 57
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 28/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1117
M 19
வெற்றி இலக்கங்கள் 32 35 44 76

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
அச்சிடப்பட்ட திகதி 2022.05.23
சீட்டிழுப்பு திகதி 28.05.2022
சீட்டிழுப்பு இலக்கம் 078
தனுசு 32 36 42 54 தனுசு
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/05/28
சீட்டிழுப்பு இலக்கம் 4769
V 0 4 3 7 1 2
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 23.05.2022
சீட்டிழுப்புக்கப்பட்ட திகதி 28.05.2022
சீட்டிழுப்பு இலக்கம் 799
K 22 38 45 47
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1570
சீட்டிழுப்பு திகதி : 2022.05.21
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,370,180/-
வெற்றி இலக்கங்கள் 02 17 43 45 T

சனிதா Shanida
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.05.21
சீட்டிழுப்பு இல : 3905
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,023,600/-
வெற்றி இலக்கங்கள் 24 26 51 70 D

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1744 நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.05.21 தினம் சனிக்கிழமை
T 28 30 45 53
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,462,780/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,311,345.60
திகதி 2022-05-21
வெற்றி வாரம் 3456
வெற்றி இலக்கங்கள் 07 18 21 25
கும்பம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,175,920/-

சீட்டிழுப்பு வாரம் 920
சனிக்கிழமை 2022.05.21
P 39 33 48 63 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 238,709,545/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பிரதம தபாலகத்துக்கு முன்பாகவுள்ள சுற்றுவட்டத்தை

## அழகுபடுத்தும் செயற்றிட்டம் ஆரம்பம் வள்ளுவர் சிலையும் நிறுவப்படவுள்ளது





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள பிரதம தபாலகத்திற்கு முன்பாகவுள்ள சுற்றுவட்டத்தினை மீளமைத்து அழகுபடுத்தும் செயற்றிட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றைய தினம் இடம்பெற்றது.

ரில்கோ தனியார் விடுதியின் உரிமையாளர் திலகராஜின் நிதிப் பங்களிப்புடன் மீளவும் புனரமைக்கப்படவுள்ள சுற்றுவட்டத்தின் அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை மதியம் 12 மணியளவில் நடைபெற்றது.

சுற்று வட்டத்தின் நடுவே திருவள்ளுவரின் சிலை நிறுவப்பட்டு அப்பகுதி அழகுபடுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், ரில்கோ தனியார் விடுதியின் உரிமையாளர் திலகராஜ், யாழ்.மாநகர ஆணையாளர் ஜெயசீலன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,18,33)


IELTS

NEW BATCH ஆரம்பம்

Cont : 077 798 9830

By - B.Murali

Speking & Grammar Cass for Grade 7 தொடக்கம் 10 வரையான வகுப்புக்கள்.

இல.53, சிவகுருநாதர் வீதி, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (11617)

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி

விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

விசா சேவைகள் (C-4360)

V2 TRAVELS

எமது கிளைகள்

பயிற்சிக்கால ஊக்கத்தொகை - 20,000/-

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

வேலையின்போது ஆரம்ப சம்பளம் - 25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்.

0777-068-777



# சிறுநீரகம் தேவை

54 வயதுடைய ஆண் ஒருவருக்கு A+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை.

**சன்மானம் வழங்கப்படும்.** (11465)

076 067 8091, 077 563 1837

021 228 3354



# IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம் (11281)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.

TP: 077 780 3970, 074 007 1970



# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )**

- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( றவுண்டப் வோட் )
- A9 வீதியுடன் 6 பரப்பும்
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் மருந்தகங்கள் அமைப்பதற்கும் ( பார்மசி )
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**தரகர் தேவையில்லை** (11638)

**பார்வையிடும் நேரம்**

**காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை**

077 814 7389, 077 241 7589 - ஜெயம்


# ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் மீள் நியமனம் இடைநிறுத்தம்

## செலவைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை

(கொழும்பு)

ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் செய்வதை மறு அறிவித்தல்வரை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச சேவை ஆணைக்குழுவின் அலுவலகம் இது தொடர்பான தீர்மானம் தொடர்பில்.அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்கள தலைவர்களுக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நிதி அமைச்சின் செய்லாளரினால் அரச சேவையின் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்காக அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொதுமக்களின் பணத்தை சிக்கனமாக பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை கருத்திற் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் பணிய மர்த்துவதற்கான விண்ணப்பங்களை மறு அறிவித்தல் வரை சமர்ப்பிக்க வேண்டாம் என அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு பொதுச் சேவை ஆணைக்குழுவின் அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது.

(ம-7)


# பதவி வெற்றிடம்

| | |
|---|---|
| பதவி | : அலுவலக உதவியாளர் - பெண் |
| வேலை நேரம் | : காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை |
| வயதெல்லை | : 25 இற்கு மேல் |
| சம்பளம் | : 15,000/= |
| தகைமை | : ஓரளவு ஆங்கில அறிவு |
| நேர்முகத் தேர்வு | : 29.05.2022 9 am - 4 pm |

(11654)

**Airtech Weighing Machines** (நிறுவை இயந்திர அலுவலகம்)

No.57, Sir.Ponnambalam Ramanathan Road, Jaffna.

021 221 6092, 071 762 2719



# வீடு வாடகைக்கு

வடமராட்சி பருத்தித்துறை புலோலி தெற்கு 1 ஆம் கட்டையில் திருத்தி அமைக்கப்பட்ட 4 அறை கொண்ட விசாலமான வீடு உடன் வாடகைக்கு உண்டு. வாடகை, முற்பணம் பேசித் தீர்மானிக்கப்படும். தரகர் தேவையில்லை. (11644)

077 796 8805



# நீர்க்கசிவினை நிரந்தரமாக நிறுத்துவதற்கு

உங்கள் வீடுகள், கட்டிடங்கள், கோவில்கள், கடைகள் (மொட்டை மாடிகள், தண்ணீர்த்தொட்டி, வில்லுமண்டபம், முகட்டுக்கூரைகள், வெளிப்புறச் சுவர்கள், மேல் மாடி குளியல் அறைகள், நீரோடிகள்), வெடிப்புகள் நீர்க்கசிவுகளை உத்தரவாதச் சான்றிதழுடன் நிவர்த்தி செய்து தருகிறோம்.

ரூபா 180/-.. முதல்

**Skyline Water Proofing**

மேலதிகமாக

Computer Service and Repair, Computer Software and OS Installation CCTV Camera Installation's and Repair எம்மால் செய்து தரப்படும்

No.89, Old Park Road, Jaffna.

077 722 0095/076 663 6481/021 221 4994

கிளிநொச்சி/முல்லைத்தீவு - 077 741 4960

வவுனியா / மன்னார் - 077 279 0743 (11655)



# சிவாச்சாரிய அபிஷேக நல்வாழ்த்துக்கள்



29.05.2022 இன்று ஞாயிற்றுக்கிழமை ஆச்சாரிய அபிஷேகம் பெறும் எமது விசுவமடு அதிசய விநாயகர் ஆலய குரு

பிரம்மஸ்ரீ

**இரகுநாத சர்மா வாசவ சர்மா**

அவர்கள் ஆச்சாரிய அபிஷேகம் பெற்று குருப்பட்டம் பெறுவதை முன்னிட்டு மகிழ்வடைகின்றோம். விசுவமடு அதிசய விநாயகரின் திருவருளால் குருக்கள் அவர்களின் குருத்துவப் பணி மேன்மேலும் சிறப்பதற்கு வாழ்த்தி வணங்குகின்றோம்.

*வாழ்த்துவோர்:-*

**விசுவமடு அதிசய விநாயகர் ஆலய பரிபாலன சபையினரும் அதிசய விநாயகர் அடியார்களும்** (11605)



# வீடு வாடகைக்கு தேவை

சிறிய குடும்பத்திற்கு கந்தர்மடம், நல்லூர், கொழும்புத்துறை பகுதியில் வீடு வாடகைக்கு தேவை. (11653)

076 977 4628

077 262 7890



# வெற்று சிலிண்டர் தேவை

பாவனைக்கு உகந்த Litro gas 37.5 kg வெற்று சிலிண்டர் தேவை.

தொடர்பு (C-4384)

077 930 4363


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.